தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

முற்றம்

₹10/- மலர் 15 இதழ் 12 ஏப்ரல் 2014 | மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ் | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

கீரைகள் சாகுபடி செய்யும் கூட்டமைப்பு 6

பெண்களின் முன்னேற்றத்திற்காக வங்கிகள்... 12

காப்பீட்டால் கிடைத்த வாழ்வு... 24

என்ன? படிக்கலாம்...

கல்வி சிறப்பிதழ்

திருமதி மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப.,

மேலாண்மை இயக்குநர்,

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

என்னுடைய பல்வேறு பணிகளுக்கு இடையிலும் சிறிது நேரம் ஒதுக்கி, முற்றம் இதழ் வாயிலாக உங்களை சந்திப்பது எனக்கு மிகுந்த மனமகிழ்ச்சியை அளிக்கிறது. என் மனதில் தோன்றும் கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பாக இதை நான் கருதுகிறேன்.

விடுமுறை என்றாலே அனைவருக்கும் மகிழ்ச்சிதான். இதற்கு யாரும் விதிவிலக்கு இல்லை. பள்ளி கல்லூரிகளில் ஆண்டு தேர்வுகள் முடிந்து கோடை விடுமுறை விடப்பட்டுள்ளது. நீங்கள் உங்கள் பிள்ளைகளுடன் கோடை விடுமுறையை மகிழ்ச்சியுடன் கொண்டாடிக் கொண்டு இருப்பீர்கள். முன்பெல்லாம் விடுமுறை என்றாலே பிள்ளைகள் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். தாத்தா பாட்டி வீடுகளுக்கு செல்வது, காலம் நேரம் இல்லாமல் விளையாடுவது என்று கோடை விடுமுறையில் மகிழ்ச்சியுடன் இருந்தார்கள். ஆனால் இப்போது விடுமுறை என்றாலே அடுத்த ஆண்டு பாடத்தை இப்போதே படிக்க ஆரம்பிக்க சிறப்பு வகுப்புகளுக்கு அனுப்ப பிள்ளைகளை வழக்கப்படுத்தி விட்டோம். ஒரு காலத்தில் படிப்பு என்பது சுகமானதாக இருந்தது. இன்றோ அது போட்டியாக மாறி விட்டது. அதிக மதிப்பெண் எடுப்பவர்கள் தான் வெற்றியாளர்கள் என்பதால், மதிப்பெண் பெறும் இயந்திரங்களாக பிள்ளைகளை உருவாக்கும் நிலை இன்று உள்ளது. தங்களின் பிள்ளைகள் நன்றாக படித்து, பெரிய வேலைக்கு செல்ல வேண்டும், கை நிறைய சம்பாதிக்க வேண்டும், வசதி வாய்ப்புகளை, சொத்து சுகங்களை பெற்று சுகமாக வாழ வேண்டும் என்று பெற்றோர்கள் நினைப்பதில் எந்தத் தவறும் இல்லை. அதற்காக தம்முடைய கனவுகளை பிள்ளைகளின் மேல் திணிப்பது எவ்வகையிலும் நியாயமில்லை.

சில குறிப்பிட்ட படிப்புகள் மட்டுமே உயர்ந்தவை என்றும், பிற படிப்புகள் தாழ்ந்தவை என்றும், நிறைய மதிப்பெண் எடுத்தால்தான் சிறந்த கல்லூரியில் இடம் கிடைக்கும், தரமான கல்வி கிடைக்கும் என்ற மனப்போக்கு அனைவரிடம் உருவாகி உள்ளது. இதனால் விடுமுறையை கொண்டாடக் கூட இடம் தராமல் பிள்ளைகளை படி... படி... என்று அழுத்தம் தரும் பெற்றோர்கள் நிறைய பேர் உள்ளனர். அவர்கள் அனைவருக்கும் நான் கூறுவது என்னவென்றால் ‘படிப்பில் இல்லை உயர்வு தாழ்வு. அனைத்துப் படிப்புகளுமே சமம்தான். எனவே பிள்ளைகள் மீது படிப்பை திணிக்காதீர்கள். குழந்தை பருவத்தை நசுக்காதீர்கள்’ என்பதுதான். சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் தங்கள் பிள்ளைகளை நன்கு படிக்க வைக்க வேண்டும். குறிப்பாக பெண் குழந்தைகளுக்கு கல்வி தருவதை தமது கடமையாகக் கருத வேண்டும். படிப்பில் உயர்வு தாழ்வு பார்க்கக் கூடாது. படிப்பை சுக மானதாக கருதும் வாய்ப்பை ஏற்படுத்தி தர வேண்டும். இவைகளெல்லாம் உங்களால் கண்டிப்பாக செய்யக் கூடியவைகள் தான். மேற்கூறிய செயல்களை நீங்கள் செய்யும் போது, உங்களைப் பார்த்து மற்றவர்களும் செய்ய முன்வருவார்கள். எனவே மற்றவர்கள் பின்பற்றும் வகையில் உங்களின் செயல்பாடுகள் இருக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

‘அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னவாயினும் புண்ணியங்கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்’

– மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

மேலாண்மை இயக்குநர்

சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் தங்கள் பிள்ளைகளை நன்கு படிக்க வைக்க வேண்டும். குறிப்பாக பெண் குழந்தைகளுக்கு கல்வி தருவதை தமது கடமையாகக் கருத வேண்டும். படிப்பில் உயர்வு தாழ்வு பார்க்கக் கூடாது. படிப்பை சுகமானதாக கருதும் வாய்ப்பை ஏற்படுத்தி தர வேண்டும். இவைகளெல்லாம் உங்களால் கண்டிப்பாக செய்யக் கூடியவைகள் தான்.

உள்ளே

எழில் நிறைந்த ஏலகிரி மலை 4

பிரண்டை துவையல் 14

முற்றக் கச்சேரி
சமூக தணிக்கை குழு 26

அன்னையர் தினம் 5

'அன்னையர் தினம்' கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அமெரிக்காவைச் சேர்ந்த ஜார்விஸ் என்ற அம்மையாரின் மகளான அன்னா ஜார்விஸ், வருடத்தில் ஏதாவது ஒரு நாளில் எல்லோரும் தங்களது தாயாரை கௌரவிக்க வேண்டும் என்று விரும்பினார்.

சிறந்த தொழில் முனைவோராவது எப்படி? 17

தொழில் துவங்குவதைக் காட்டிலும். இன்றைக்கு எந்த தொழில் வெற்றி வாய்ப்பு நிறைந்தது என்பதை அறிந்து, சுய உதவிக் குழுக்கள் தொழில் செய்தால் கண்டிப்பாக சிறந்த தொழில் முனைவோராக வெற்றி பெறலாம்.

பெண்கள்

உடல் நலம் காக்க 15

உணவுக் கட்டுப்பாட்டில் இருக்கும் பெண்கள் உட்பட அனைத்துப் பெண்களும் கீழ்க்கண்ட ஐந்து உணவு வகைகளை உண்ண வேண்டும் என ஊட்டச்சத்து நிபுணர்கள் மற்றும் மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றனர்.

அறிவுக்கண் திறக்கும்

8 கல்வியைப் போற்றிடுவோம்...

நாள்தோறும் நவீனமடைந்து வரும் உலகத்தில், பல்வேறு துறைகளிலும் உள்ள நுட்பங்களை அறிந்து கொள்ள நமக்கு உறுதுணையாக இருப்பது கல்வி ஆகும்.

எந்த நாடு கல்வியில் சிறந்து விளங்குகிறதோ அந்நாடு அனைத்து வளங்களையும் கொண்ட நாடாக உருவாகும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

மலர் 15 இதழ் 12 ஏப்ரல் 2014

விலை ரூ. 10/-

கௌரவ ஆசிரியர்

மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
டபிள்யூ. சிராஜுன்னிசா
பொது மேலாளர்

ஆசிரியர் குழு

ம. மனோகர சிங்
கூடுதல் இயக்குநர்

எம். மாதவி
கூடுதல் இயக்குநர்

எல். ராஜா
கூடுதல் இயக்குநர்

புது வாழ்வு திட்டம்

ஆர். வி. ஷஜீவனா
கூடுதல் திட்ட இயக்குநர்

கா. சுஜாதா ஜேக்கப்
கூடுதல் திட்ட இயக்குநர்

மோ. கணேஷ்குமார்
தகவல் தொடர்பு வல்லுநர்

பொறுப்பாசிரியர்
மு. மேகவர்ணம்
மக்கள் தொடர்பு அலுவலர்

முற்றம் உதவியாளர்
ஏ. கண்ணன்

கணக்கர்
சு. சசிகலா

கணினி வடிவமைப்பு
மு. செல்வம்

பிழை திருத்துபவர்
எஸ். எஸ். ரவிச்சந்திரன்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

ஆசிரியர், 'முற்றம்'
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.

தொலைபேசி: 044-2817 3412 / 3413
தொலைநகல்: 044-2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது

ஆசிரியரிடமிருந்து...

உழைக்கும் கரங்கள்...

"உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்" எனும் முழக்கத்தை, சமூக விஞ்ஞானியும், பொது உடமை சிந்தனையாளருமான கார்ல் மார்க்ஸ் அவர்கள் தொழிலாளர்களின் மத்தியில் வைத்தார். உலகை உருவாக்குவதில் தொழிலாளர்களின் மாபெரும் பங்களிப்பைப் புரிந்து கொண்டு, அவர்களின் பிரச்சனைகளையும், தேவைகளையும் உணர்ந்து, தொழிலாளர்களின் நலனில் அக்கரை கொள்ள வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தவே மே மாதம் முதல் தேதி "உலக தொழிலாளர்கள் தினம்" அனுசரிக்கப்பட்டு வருகிறது.

நமது வாழ்நாளில் நாம் பயன்படுத்துகின்ற ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு மதிப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒரு சில பொருட்களின் விலையானது கற்பனைக்கு எட்டாத அளவிற்கு விலை மதிப்பிடப்பட்டுள்ளது. அதே வேளையில், மனிதர்கள் உயிர் வாழ தேவைப்படும் ஒரு சில அத்தியாவசிய பொருட்களுக்கு விலை மதிப்பானது குறைவாகவே மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த முரண்பாடான விலை நிர்ணயத்திற்கு என்ன காரணம் என்பதை ஆராய்ந்து பார்க்கும் போது, எந்த ஒரு பொருளின் மீது மனித உழைப்பானது மிக அதிகமாக செலுத்தப்படுகிறதோ, அந்த பொருளுக்கே அதிக மதிப்பு என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. இதன் மூலம் மனித உழைப்பின் மாண்பை ஒருவரால் புரிந்து கொள்ள முடியும்.

இப்படிப்பட்ட உயர்வான உழைப்பை தியாகம் செய்து, மனித குலத்தை வாழ வைக்கும் தொழிலாளர்களின் நலனை பாதுகாக்க வேண்டியது சமுதாயத் தின் கடமையாகும். 'மே தினம் உழைப்பவர் சீதனம்' என முழக்கமிட்டால் மட்டும் போதாது, தொழிலாளர்கள் நலனுக்கான கொள்கைகளை வகுத்து நடைமுறைப்படுத்துவது நமது கடமையாகும். இல்லாதவர்கள் என்று யாரையும் கூறி விட முடியாது. காரணம், இல்லாதவர்களிடத்தில் விலை மதிப்புமிக்க உழைப்பானது இருக்கின்றது.

'இரத்தம் இங்கு வியர்வையாகக் கொட்டுகின்றது' என்று தொழி லாளர்களின் நிலையை வெளிப்படுத்தும் வகையிலான கவிதையினை ஒரு கவி ஞர் இயற்றினார். வியர்வையை கொட்ட வைக்கும் வெயிலின் கொடுமையை மே மாத கோடையில் நாம் அனுபவிக்கும் போதுதான் உழைப்பின் கடுமை நமக்குப் புரியும்.

கோடை வெப்பத்திலிருந்து நம்மைக் காத்துக் கொள்ள வெப்பம் தணிக்கும் உணவுகளை அருந்துங்கள். வெள்ளரி, தர்பூசணி, நுங்கு, இளநீர் போன்றவை நீர் சத்து நிறைந்த இயற்கைக் பொருட்களாகும். அவைகளைப் பயன்படுத்துவதன் மூலம் கோடையின் வெப்பத்திலிருந்து உங்களைக் காத்துக் கொள்ளுங்கள். இரசாயனம் நிறைந்த குளிர்பானங்களை தவிர்த்து விடுங்கள்.

இப்படிக்கு

(எஸ். சின்னப்பன்)
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

சந்தாத் தொகையை 'முற்றம்' என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தக்க முறையில் வங்கி வரைவோலையாக மட்டுமே அனுப்ப வேண்டும். வங்கி வரைவோலையுடன், சந்தாதாரரின் பெயர், க/பெ. (அ) த/பெ., குழுவின் பெயர், வீட்டு எண், தெரு எண், கிராமத்தின் பெயர், தாலுக்கா பெயர், மாவட்டத் தின் பெயர் ஆகியவற்றுடன் அஞ்சல் குறியீட்டு எண்ணையும் (பின்கோடு எண்) தவறாமல் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். முற்றம் சந்தாக்களுக்குரிய புத்தகம் அந்தந்த நபருக்கு அனுப்ப வேண்டுமா? அல்லது மொத்தமாக எந்த முகவரிக்கு அனுப்ப வேண்டும் என்பதை தெளிவாகக் கடிதத்தில் குறிப்பிட வேண்டும்.

முற்றம் இதழ் சந்தா விபரம்

ஒரு ஆண்டு சந்தா	– ரூ. 100/–
இரண்டு ஆண்டு சந்தா	– ரூ. 150/–
மூன்று ஆண்டு சந்தா	– ரூ. 250/–
நான்கு ஆண்டு சந்தா	– ரூ. 300/–
ஆயுள் சந்தா	– ரூ. 600/–
புரவலர் கட்டணம்	– ரூ. 15,000/–

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும் ஆலோசனைகளும் வரவேற்கப்படுகிறது.

கோடை விடுமுறையை பயனுள்ள முறையில் கழித்திட ஏதுவாக தமிழ்நாட்டின் பல்வேறு சுற்றுலா தலங்களையும், அவைகளின் சிறப்புகளையும் வண்ணப் படங்களுடன் முற்றம் இதழில் வெளியிட்டிருந்தது எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

சங்கீதா குருமூர்த்தி,
முத்துச்சிப்பி மகளிர் சுய உதவிக் குழு,
தோவாளை, கன்னியாகுமரி மாவட்டம்

மகளிர் திட்டம், புதுவாழ்வுத் திட்டம், சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகளையும், அவைகளால் பயன் பெற்றவர்களின் வெற்றிக் கதைகளையும், பயனுள்ள கட்டுரைகள் பலவற்றையும் மாதந்தோறும் வெளியிட்டு வரும் முற்றம் எங்களுக்கு நல்லதொரு வழிகாட்டியாகும்.

கிருஷ்ணவேணி முருகன்,
பஞ்சவர்ணம் மகளிர் மன்றம்,
திருத்தவெளி, காஞ்சிபுரம் மாவட்டம்.

கோடைக்காலத்திற்கு ஏற்ற உணவு வகைகள், அணிய வேண்டிய ஆடைகள் போன்ற விபரங்களும், தேர்தல் குறித்த விழிப்புணர்வு வாசகங்களும், வீட்டுத் தோட்டம் அமைக்கும் முறைகளும் குறித்த கட்டுரைகள் சிறப்பாக இருந்தன.

தங்கமணி நாகராஜன்,
ரோஜாப்பூ சுய உதவிக் குழு,
மல்லசமுத்திரம், நாமக்கல் மாவட்டம்.

கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் வழிகாட்டுதலுடன் வாழ்வில் வளம் பெற்றுள்ள கிராமப்புற ஏழை மக்களின் வெற்றிக் கதைகளை, அவர்களின் வாயிலாக கேட்டு வெளியிட்டு வரும் முற்றம் இதழ் மேலும் சிறப்பாக செயல்பட எங்களுக்கு ஊக்கத்தை தருகிறது. முற்றத்திற்கு நன்றி.

மீனாட்சி விஜயகுமார், செயலாளர்,
கிராம வறுமை ஒழிப்பு சங்கம்,
மேட்டூர், சேலம் மாவட்டம்.

இப்படிக்கு

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

பாராகிளைடிங் எனும் சாகச விளையாட்டு ஏலகிரி மலையில் நடத்தப்படுகிறது.

எழில் நிறைந்த

ஏலகிரி மலை

விண்ணைத் தொடும் மலைகள், அவைகளில் அமைந்துள்ள மலைவாழிடங்கள், துள்ளி குதித்து விழும் அருவிகள், விலங்கினங்கள் நிறைந்த வனங்கள், அலைகள் தாலாட்டும் கடற்கரைகள், அனைத்து மதத்தினரின் வழிபாட்டிடங்கள் என தமிழகம் எங்கும் சுற்றுலா தலங்கள் நிறைந்துள்ளன. அவைகளைக் காண ஆண்டு முழுவதும் சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர்.

வேலூர் மாவட்டத்தில் உள்ள ஏலகிரி மலைத் தொடரின் சிறப்பு குறித்து அப்பகுதியில் செயல்படும் செம்புங்கனூர் மகளிர் சுய உதவிக் குழுவினர் கூறுவதைக் கேட்போம் வாருங்கள்.

எல்லோருக்கும் வணக்கம். நாங்க ஏலகிரி மலைப் பகுதியில செயல்படுகிற செம்புங்கனூர் மகளிர் சுய உதவிக் குழுவைச் சேர்ந்தவங்க. வாணியம்பாடி – திருப்பத்தூர் சாலையில இருக்கிற ஏலகிரி மலை 30 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ளது. 1410 மீட்டர் உயரமுள்ள இந்த மலையில 14 கிராமங்கள் இருக்குது.

கம்பர், இளங்கோவடிகள், ஔவையார், பாரி, ஓரி, காரி, பேகன் என்ற தமிழ் பெயர்களைக் கொண்ட 14 கொண்டை ஊசி வளைவுகளைக் கொண்ட அருமையான மலைப்பாதை வழியா எங்க மலைக்கு வரலாம். கொம்புத் தேன், பலாப்பழம், ராம சீதாப் பழம் என பல்வேறு வகையான பழ மரங்கள் நிறைய உள்ளது. மலைகளுக்கு நடுவுல உள்ள புங்கனூர் ஏரியில் படகு சவாரி போகலாம். இந்த ஏரியில் அமைக்கப்பட்டிருக்கிற நீரூற்று ரொம்ப அழகா இருக்கும். பக்கத்துலயே குழந்தைகளுக்கான பெரிய பூங்காவும் இருக்குது.

அரசு மூலிகைத் தோட்டத்துல அரிய வகை மூலிகைகள் பராமரிக்கப்பட்டு வருது. அரசு பழப்பண்ணையும், மலை நடைபாதைகளும் சுற்றுலாப் பயணிகளுக்கு இனிமையான அனுபவத்தைத் தரும். இங்க இருக்கிற தொலைநோக்கி வழியா பார்க்கும் போது மலையின் அழகும், அடிவாரத்துல இருக்கிற ஊர்களும் நல்லா தெரியும்.

இந்த மலையில பாயும் அத்தாறு அடர்ந்த மூலிகைக் காடுகளின் வழியே ஓடி 30 மீட்டர் உயரத்தில் இருந்து ஜலகம்பாறை நீர்வீழ்ச்சியாக விழுகிறது. மூலிகை சத்து நிறைந்த இந்த அருவி தண்ணீரில் குளித்தால் பல நோய்கள் தீரும்.

பாராகிளைடிங் எனும் சாகச விளையாட்டும், மலையேறும் பயிற்சியும் ஏலகிரி மலையில நடத்தப்படுது. மேலும் காவலூரில் அமைந்துள்ள வைனு பாப்பு வானியற்பியல் ஆய்வகம், ஏலகிரி வேலவன் கோவில் போன்றவையும், இன்னபிற இடங்களும் 'சின்ன ஊட்டி'ன்னு சொல்லுற ஏலகிரி மலையில நிறைய இருக்கு. அதையெல்லாம் வார்த்தையால சொல்ல முடியாது. நீங்க அவசியம் ஏலகிரி மலைக்கு வாங்க. கோடை காலத்துல மட்டுமில்லாம ஆண்டின் எல்லா நாட்களிலும் ஏலகிரி மலை சிறந்த சுற்றுலா தலந்தான்.

குறைந்த செலவுல போய் வரக்கூடிய சுற்றுலா தலமான ஏலகிரி மலைக்கு குடும்பத்தோட நீங்க வாங்க. நீங்களும் குழந்தைகளா மாறி விடுவீங்க. மனசுக்கு புத்துணர்ச்சியும், புதிய அனுபவத்தையும் பெற்றிடுவீங்க. ■

மலைகளுக்கு நடுவுல உள்ள புங்கனூர் ஏரியில படகு சவாரி போகலாம். இந்த ஏரியில் அமைக்கப்பட்டிருக்கிற நீரூற்று ரொம்ப அழகா இருக்கும். ஏரிக்குப் பக்கத்துலயே குழந்தைகளுக்கான பெரிய பூங்காவும் இருக்குது.

தினம்...தினம்...

உலக செஞ்சிலுவை தினம்

முதலாம் உலகப் போரின் பின்னர் உலக நாடுகளிடையே சமாதானத்துக்கான தேவை உணரப்பட்டது. செக்கோஸ்லவாக்கியாவில் சமாதானத்தை வலியுறுத்தி 1922ஆம் ஆண்டில் ஈஸ்டர் திருநாளுக்காக மூன்று நாள் யுத்த நிறுத்தத்திற்கான வேண்டுகோள் விடப்பட்டது. இதுவே பின்னர் செஞ்சிலுவை நாளாக கடைபிடிக்கத் தூண்டுதலாக அமைந்தது எனலாம்.

1934ஆம் ஆண்டு ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்ற செஞ்சிலுவைச் சங்கத்தினரின் 15வது அனைத்துலக மாநாட்டில் இது கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இருப்பினும் 1948ஆம் ஆண்டிலேயே இந்நாளை செஞ்சிலுவைச் சங்கத்தை ஆரம்பித்தவரான ஹென்றி டியூனண்ட் அவர்களின் நினைவாக ஆண்டுதோறும் கொண்டாடப்பட தீர்மானம் எடுக்கப்பட்டது. எனினும் பின்னர் பல மாற்றங்களுக்குள்ளாகி 1984இல் இருந்து இந்நாள் உலக செஞ்சிலுவை நாள் என அழைக்கப்படுகிறது. ■

1922ஆம் ஆண்டில் ஈஸ்டர் திருநாளுக்காக மூன்று நாள் யுத்த நிறுத்தத்திற்கான வேண்டுகோள் விடப்பட்டது. இதுவே பின்னர் செஞ்சிலுவை நாளாக கடைபிடிக்கத் தூண்டுதலாக அமைந்தது எனலாம்.

அன்னையர் தினம்

உலகம் முழுவதும் மே மாதம் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை ‘அன்னையர் தினம்’ கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அமெரிக்காவைச் சேர்ந்த ஜார்விஸ் என்ற அம்மையாரின் மகளான அன்னா ஜார்விஸ், வருடத்தில் ஏதாவது ஒரு நாளில் எல்லோரும் தங்களது தாயை கௌரவிக்க வேண்டும் என்று விரும்பினார். இதற்காக தமது நாட்டின் அரசுக்கு கோரிக்கை வைத்தார். இவரது கோரிக்கையை ஏற்று பென்சில்வேனியா மாகாண அரசு 1913ஆம் ஆண்டு முதல் அன்னையர் தினத்தை அங்கீகரித்தது. ■

உலக செவிலியர் தினம்

சாதாரண மருத்துவ சேவையிலிருந்து போர் கால சேவைகள் வரை செவிலியர்களது சேவைகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. 1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம், நவீன செவிலியர் முறையை உருவாக்கிய இங்கிலாந்தைச் சேர்ந்த புளோரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையாரின் பிறந்த நாளான மே 12ஆம் தேதியை சிறப்பாக நினைவு கூர முடிவு செய்யப்பட்டது. அன்றைய தினத்தை உலக செவிலியர் தினமாக அனுசரிக்க முடிவு செய்யப்பட்டது. இங்கிலாந்தில் ஆண்டுதோறும் மே 12ஆம் தேதி இலண்டனில் உள்ள வெஸ்ட் மினிஸ்டர் அபே என்ற இடத்தில் சம்பிரதாயபூர்வமாக இந்தத் தினம் கொண்டாடப்படுகிறது. ■

உலக புகையிலை எதிர்ப்பு தினம்

மனித உயிர்களுக்கு இறப்பை அளிக்கும் இரண்டாவது முக்கிய காரணியாக புகையிலை கருதப்படுகிறது. புகையிலை என்றதும் நினைவிற்கு வருவது சிகரெட். இதில் உள்ள நிக்கோடின் என்ற நச்சுப் பொருள்தான், புகைப்பவர்களை அடிமையாக்குகிறது. ஒரு சிகரெட்டில் 4 ஆயிரம் வேதிப்பொருட்கள் கலந்துள்ளன. இவற்றில் 43 பொருட்கள் புற்றுநோயை ஏற்படுத்தக் கூடியவை. புற்றுநோய் ஏற்படும் காரணங்களில் புகையிலைக்கு 70 சதவீதம் பங்குள்ளது. இந்தியாவில் அதிகம் பேர் சிகரெட், பீடி மற்றும் வாய்க்குள் சுவைக்கும் புகையிலையால் பாதிக்கப்படுகின்றனர். புகைப்பிடிப்பதால் ஏற்படும் பாதிப்புகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக உலக சுகாதார நிறுவனத்தால் 1987ஆம் ஆண்டு முதல் மே 31ஆம் தேதி சர்வதேச புகையிலை எதிர்ப்பு தினம் கடைபிடிக்கப்படுகிறது.■

பல்வேறு வகையான கீரைகளை சாகுபடி செய்து வரும் கூட்டமைப்பு

உடல் நலத்தைக் காக்கும்

கீரைகள் சாகுபடி செய்யும் கூட்டமைப்பு

கிராமப்புற ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் செயல்பட்டு வரும் மகளிர் திட்டம் சுய உதவிக் குழு மகளிருக்கு தொழிற்பயிற்சிகள் பல அளித்து, அவர்களுக்கு வங்கிக் கடன் வாய்ப்புகளை ஏற்படுத்தித் கொடுத்து, தொழில் நடவடிக்கையில் ஈடுபடச் செய்து, தொழில் முனைவோர்களாக வெற்றி நடைபோட வழி வகை செய்து தருகிறது.

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் ஊராட்சியில் உள்ள ஊத்துக்காடு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினர் களாக இணைந்துள்ள சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த மகளிர் பல்வேறு வகையான கீரைகளை பயிரிட்டு விற்பனை செய்து வருகின்றனர். இக்கூட்டமைப்பின் செயல்பாடுகள் குறித்தும், அவர்கள் மேற்கொண்டு வரும் தொழில் குறித்தும் நமக்கு அளித்த நேர்காணல்.

உங்கள் கூட்டமைப்பில் எத்தனை குழுக்கள் உறுப்பினராக உள்ளன?

எங்கள் ஊத்துக்காடு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் மொத்தம் 15 குழுக்கள் உறுப்பினராக இணைந்துள்ளன. அந்தக் குழுக்களில் சுமார் 140 மகளிர் உறுப்பினர்களாக செயல்பட்டு வருகின்றன.

விவசாயத்தை தேர்ந்தெடுக்க காரணம் என்ன?

எங்கள் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் அனைவரும் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான். எனவே எங்களுக்கு விவசாய முறைகள் அனைத்தும் தெரியும். எங்களில் சிலருக்கு சொந்த மாக சிறிய அளவில் நிலம் உள்ளது. எங்கள் பகுதியில் உள்ள மண் வளமாக இருக்கிறது. எனவே விவசாயம் மூலம் வருவாய் பெற முடியும். மேலும் கீரைகள் சாகுபடி என்பது எளிமையான விவசாய முறை என்பதால் நாங்கள் விவசாயத்தைத் தேர்ந்தெடுத்தோம்.

பயிற்சிகள் மற்றும் வங்கிக் கடன் பெற்றுள்ளீர்களா?

ஏற்கனவே விவசாயக் குடும்பத்தை சேர்ந்தவர்கள் நாங்கள். இருப்பினும் தற்கால நவீன விவசாய முறைகளைப் பற்றி தெரிந்து கொள்ளவும், விற்பனை முறைகளைப் பற்றி அறிந்து கொள்ளவும் பயிற்சிகளைப் பெற்றுள்ளோம். மகளிர் திட்டத்தின் உதவியுடன் வங்கிக் கடனும் எங்களுக்குப் பெற்றுத் தரப்பட்டுள்ளது.

எத்தகைய பயிர்களை சாகுபடி செய்கிறீர்கள்?

கீரை வகைகளை மட்டுமே சாகுபடி செய்கிறோம். பச்சைக் கீரை வகைகள், அரைக் கீரை, தண்டுக் கீரை, சிறுகீரை போன்ற கீரைகளை அதிகம் பயிரிடுகிறோம்.

நீங்கள் எந்த வகையான உரங்களைப் பயன்படுத்துகிறீர்கள்?

நாங்க இரசாயன உரங்களைப் பயன்படுத்துவது இல்லை. இயற்கை உரங்கள், மாட்டுச் சாணம் போன்றவைகளை மட்டுமே பயன்படுத்தி வருகிறோம்.

> எங்கள் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் அனைவரும் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான். எனவே எங்களுக்கு விவசாய முறைகள் அனைத்தும் தெரியும். எங்களில் சிலருக்கு சொந்தமாக சிறிய அளவில் நிலம் உள்ளது. எங்கள் பகுதியில் உள்ள மண் வளமாக இருக்கிறது.

இயந்திரங்களைப் பயன்படுத்துகிறீர்களா?

நாங்கள் கீரைகள் மட்டுமே சாகுபடி செய்கிறோம். அதனால அதற்கு இயந்திரங்கள் எதுவும் தேவையில்லை. எனவே நாங்கள் இயந்திரங்களைப் பயன்படுத்துவது இல்லை.

கீரைகளை எப்படி விற்பனை செய்கிறீர்கள்?

பறிக்கப்படும் கீரைகளை மொத்த வியாபாரிகளிடம் கொடுக்காமல் நாங்களே நேரிடையாக விற்பனை செய்கிறோம். சிறு சிறு கட்டுகளாகக் கட்டி, பேருந்துகள் மூலம் பல்வேறு இடங்களுக்கு கொண்டு போய் நாங்களே விற்பனை செய்வோம். சில இடங்களில் தலைச்சுமையாகவும் எடுத்துக் கொண்டு போய், வீடுகளில் விற்பனை செய்வோம்.

ஏன் சொந்தமாக வாகனம் இல்லையா?

தற்போது சொந்தமாக வாகனம் இல்லாததால், வாடகை வாகனம் மூலமாகவும், பஸ்கள் மூலமாகவும் கீரைகளை விற்பனைக்கு கொண்டு போகிறோம். சீக்கிரமே கூட்டமைப்புக்கு சொந்தமாக வாகனம் வாங்க மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலுடன் முயற்சிகள் எடுத்து வருகிறோம்.

பயிர்களுக்கு காப்பீடு செய்திருக்கிறீர்களா?

கீரைப் பயிர்கள் விரைவில் வளரும் என்பதாலும், அவைகளை குறைவான அளவில் பராமரித்தாலே போதும் என்பதாலும் காப்பீடு செய்யவில்லை.

இதன் மூலம் மாதம் எவ்வளவு ரூபாய் வருவாய் கிடைக்கிறது?

கீரைகள் விற்பனை செய்வதில் ஈடுபடும் எங்கள் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மாதம் ரூ. 6000/– முதல் ரூ. 10,000/– வரை வருவாய் பெறுகின்றனர்.

மகளிர் திட்டம் உங்களுக்கு செய்யும் உதவிகள்?

தனித்தனியாக இருந்த எங்களை குழுவாக சேர்த்து, பிறகு கூட்டமைப்பாக உருவாக்கி, எங்களுக்கு பயிற்சிகள் தந்து, வங்கிக் கடன் வாங்கிக் கொடுத்து, இன்னைக்கு நாங்களும் தொழில் முனைவோர்கள் என்பதை உருவாக்கித் தந்தது மகளிர் திட்டம்தான். அதற்காக நாங்க மகளிர் திட்டத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் பல வகையிலும் எங்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

உங்களுடைய எதிர்கால குறிக்கோள் என்ன?

நிலத்தை குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து வருகிறோம். சொந்த மாக நிலம் வாங்கி விவசாயம் செய்ய வேண்டும் என்பது எங்களுடைய குறிக்கோள். மேலும் கீரைகளை வாடகை வண்டி மூலமாகவும், பஸ்கள் மூலமாகவும் கொண்டு போய் விற்பனை செய்கிறோம். இதனால நேரமும் பணமும் செலவாகுது. சொந்தமாக வண்டி வாங்க வேண்டும் என்று முயற்சிகள் மேற்கொண்டுள்ளோம். விரைவில் எங்களின் முயற்சி பலிக்கும் என்று நினைக்கிறோம்.

மேலும் விவசாயம் செய்யும் நேரம் போக மீதி நேரம் வேலையில்லாமல் இருக்கிறோம். எனவே எங்களுக்கு அரசு உதவிகள் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். கால்நடைகள் வாங்கி வளர்க்க நிதி உதவி செய்ய வேண்டும் என்பது எங்களின் வேண்டுகோள்.

ஊத்துக்காடு என்றாலே கீரைகள்தான் நினைவிற்கு வரும். சுவையும், சத்தும் நிறைந்த கீரைகளை சாகுபடி செய்து வரும் ஊத்துக்காடு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடுகளும், அவர்களின் அயராத முயற்சிகளும் இன்று அந்த கூட்டமைப்பிற்கு வெற்றியைத் தந்துள்ளது. அவர்கள் மேலும் சிறப்பாக செயல்பட்டு பல்வேறு சாதனைகள் படைப்பார்கள் என்பது உறுதி.

> தனித்தனியாக இருந்த எங்களை குழுவாக சேர்த்து, பிறகு கூட்டமைப்பாக உருவாக்கி, எங்களுக்கு பயிற்சிகள் தந்து, வங்கிக் கடன் வாங்கிக் கொடுத்து, இன்னைக்கு நாங்களும் தொழில் முனைவோர்கள் என்பதை உருவாக்கித் தந்தது மகளிர் திட்டம்தான்.

சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சிக்காகவும், அவைகளின் நீடித்த செயல்பாட்டிற்காகவும் மகளிர் திட்டமும், புதுவாழ்வு திட்டமும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. இதன் விளைவாக இன்று கிராமப்புறங்களில் உள்ள ஏழை குடும்பத்தைச் சேர்ந்த மகளிர் அனைத்துத் துறைகளிலும் முத்திரைப் பதித்து வருகின்றனர். ■

என்ன படிக்கலாம்...?

அறிவுக்கண் திறக்கும்

கல்வியைப் போற்றிடுவோம்...

கல்விச் செல்வம் மட்டுமே மற்றவர்களுக்கு கொடுத்தாலும் குறையாதது.

நாள்தோறும் நவீனமடைந்து வரும் உலகத்தில், பல்வேறு துறைகளிலும் உள்ள நுட்பங்களை அறிந்து கொள்ள நமக்கு உறுதுணையாக இருப்பது நாம் கற்கும் கல்வியாகும். கல்விச் செல்வம் மட்டுமே அனைத்து செல்வங்களிலும் சிறந்தது ஆகும். “ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப் புடைத்து” (குறள் 398) என்ற குறள் மொழிக்கேற்ப ஒருதலைமுறையில் பெறும் கல்வி அறிவானது, ஏழேழு தலைமுறைக்கும் பாதுகாப்பாக அமைகிறது.

கல்விச்செல்வம்மட்டுமேமற்றவர்களுக்குகொடுத்தாலும்குறையாதது. பிறருக்கு கொடுக்கக் கொடுக்க வளரக் கூடியது. யாராலும் களவாட முடியாதது. எந்த நாடு கல்வியில் சிறந்து விளங்குகிறதோ அந்நாடு அனைத்து வளங்களையும் கொண்ட நாடாக உருவாகும். அதேபோல் பெண்களுக்குக் கல்வி அறிவு கொடுப்பதன் மூலம், அவர்களுக்கு நல்ல எதிர்காலத்தை அளிக்க முடியும். எனவே பெண்களுக்குக் கல்வி அறிவினை அளிப்பதற்கு நாம் என்றும் முன்னிற்க வேண்டும்.

இன்று அனைத்துத் துறைகளிலும் வேகமான வளர்ச்சி காணப்படுகிறது. அவைகளில் வேலைவாய்ப்புகளும் ஏராளமாக குவிந்து கிடக்கின்றன. அத்துறைகளில் உள்ள அறிவியல் தொழில் நுட்பங்களை அறிந்து கொள்ளும் அறிவினை அளிக்கும் கல்வி

எந்த நாடு கல்வியில் சிறந்து விளங்குகிறதோ அந்நாடு அனைத்து வளங்களையும் கொண்ட நாடாக உருவாகும்.

நிறுவனங்களும் நம் நாட்டில் ஏராளமாய் உள்ளன. குறிப்பாக தமிழகத்தில் செயல்பட்டு வரும் அரசு மற்றும் தனியார் கல்வி நிலையங்கள் பல்வேறு துறைகளுக்கும் தகுதி வாய்ந்தவர்களை உருவாக்கி வருகின்றன. பல்வேறு வகையான படிப்புகளை வழங்கும் பல்கலைக் கழகங்களும், கல்லூரிகளும் நம் மாநிலத்தில் அதிகளவில் உள்ளன. அவைகளில்

மருத்துவப் படிப்பில் சேர +2 படிப்பில் இயற்பியல், வேதியியல், உயிரியல் அல்லது இயற்பியல், வேதியியல், விலங்கியல், தாவரவியல் ஆகிய பாடங்களைப் படித்துத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். +2 தேர்வில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் மருத்துவக் கல்லூரிகளில் சேரலாம்.

சேர்ந்து பயில்வதற்காக நாட்டின் அனைத்து மாநிலங்களில் இருந்தும் அயல்நாடுகளில் இருந்தும் ஏராளமானவர்கள் வருகின்றனர்.

12ஆம் வகுப்பு மற்றும் பட்டப் படிப்பு முடித்த மாணவர்கள் அனைவருக்கும் இது முக்கியமான முடிவினை எடுக்கும் காலகட்டமாகும். +2 முடித்தவர்கள், தங்களுக்கு விருப்ப மான பட்டப்படிப்பைப் பயில தகுதியான கல்லூரியைத் தேடுகின்றனர். பட்டப் படிப்பை முடித்தவர்களோ, சிறந்த வேலை வாய்ப்பைத் தரக்கூடிய உயர் கல்வியை நாடுகின்றனர். இத்தகைய மாணவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், பல்வேறு படிப்புகள் குறித்த பயனுள்ள விபரங்களை இவ்விதழில் காணலாம்.

மருத்துவம்

இன்று மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த படிப்பாக மருத்துவம் கருதப்படுகிறது. பொது மருத்துவம், பல் மருத்துவம், ஹோமியோபதி மருத்துவம் போன்றவை குறித்த படிப்புகளுக்கு சிறப்பான வரவேற்பு உள்ளது. பல்வேறு நோய்களுக்கு மேற்கொள்ளப்படும் அறுவைச் சிகிச்சை குறித்த படிப்புகளைக் கற்பிக்கும் நமது மாநிலத்தில் உள்ள கல்விக்கூடங்களில் சேர்ந்து பயில அயல்நாட்டைச் சேர்ந்த மாணவர்களும் விரும்புகின்றனர் என்பது நமக்குப் பெருமையான செய்தியாகும்.

மருத்துவராக வேண்டுமெனில் மருத்துவ மற்றும் அறுவைச் சிகிச்சைப் படிப்பில், இளநிலைப் பட்டம் (எம்.பி.பி.எஸ்.) பெற்றிட வேண்டும். மருத்துவப் படிப்பில் சேர +2 படிப்பில் இயற்பியல், வேதியியல், உயிரியல் அல்லது இயற்பியல், வேதியியல், விலங்கியல், தாவரவியல் ஆகிய பாடங்களைப் படித்துத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். +2 தேர்வில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் மருத்துவக் கல்லூரிகளில் சேரலாம். மருத்துவப் படிப்பில் தேர்ச்சி பெற்றதும், தமிழ்நாடு மருத்துவக் கவுன்சிலில் பதிவு செய்து விட்டு, அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் மருத்துவராகப் பணியாற்றலாம். சுயமாகவும் மருத்துவமனை நடத்தலாம். மருத்துவத்தில் மேற்படிப்பு படிக்க விரும்பினால் எம்.டி., எம்.எஸ்., எம்.சி.எச்., போன்ற படிப்புகள் உள்ளன.

பல் மருத்துவம்

பற்களைச் சீரமைப்பது, செயற்கைப் பற்களைப் பொருத்துவது, வாய் மற்றும் பல் சம்பந்தமான நோய்கள் வராமல் தடுப்பது, பல் நோய்களைக் குணப்படுத்துவது

சட்டக் கல்வி

சட்டத்தின் முன்னர் அனைவரும் சமம் என்ற வாக்கிற்கு ஏற்ப, சட்டம் மற்றும் அது தொடர்பான கல்வியைக் கற்றுத் தரும் கல்விக் கூடங்களில் ஏராளமானவர்கள் பயின்று வருவது நம் நாட்டின் சட்டத்துறைக்குப் பெருமையாகும். தமிழகத்தில் டாக்டர் அம்பேத்கார் சட்டப் பல்கலைக் கழகத்தின் கீழ் சென்னை, மதுரை, கோவை, திருச்சி, நெல்லை மற்றும் செங்கல்பட்டு ஆகிய இடங்களில் அரசு சட்டக் கல்லூரிகளும், சேலத்தில் தனியார் சட்டக் கல்லூரியும் செயல்பட்டு வருகின்றன.

கலை மற்றும் அறிவியல் படிப்புகள்

+2 படிப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் கலை, அறிவியல் கல்லூரிகளில் பட்டப் படிப்புகளில் சேர்வதற்கு ஆர்வத்துடன் முன்வர வேண்டும். கலைப் படிப்புகளில் தற்போது பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. முன்பிருந்த பாடப் பிரிவுகளை மாற்றிவிட்டு, வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தரக்கூடிய புதிய பாடப்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் அரசு மற்றும் தனியார் கல்லூரிகள் ஏராளமாகச் செயல்பட்டு வருகின்றன.

பொறியியல் கல்லூரிகளில் நடைபெறுவது போல, கலைக் கல்லூரிகளிலும் தொழில் நிறுவனங்களின் வளாகத் தேர்வு (கேம்பஸ் இண்டர்வியூ) நடத்தப்பட்டு, மாணவ – மாணவியர், படித்து முடித்தவுடனே பணி ஆணையைப் பெற்று விடுகின்றனர். எனவே வேலைவாய்ப்புத் தரும் பாடப் பிரிவுகளில் ஏதேனும் ஒன்றில் சேர்ந்து, நன்கு படித்து, நல்ல மதிப்பெண்களையும், உடனடி வேலைவாய்ப்பையும் பெறலாம்.

கலை மற்றும் அறிவியல் பாடத் திட்டங்களில் குறிப்பிட்ட சில பாடங்களைப் பயின்றால் எளிதில் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதால் அப்படிப்புகளில் சேர மாணவர்கள் பெரிதும் விரும்புகின்றனர். அத்தகைய பாடத் திட்டங்கள் இன்று பெருவாரியான கல்லூரிகளில் நடத்தப்படுகின்றன.

இளங்கலை அறிவியல் காட்சித் தகவலியல்

மீடியா என்று அழைக்கப்படும் பத்திரிக்கைகள், சினிமா, தொலைக்காட்சி, விளம்பரம் ஆகிய அனைத்திற்குமான நுழைவு வாயில் விஸ்காம் எனப்படும் காட்சித் தகவலியல் படிப்பாகும். இதில் ஓவியம், புகைப்படக்கலை, குறும்படம், நாடகம், சினிமா, வீடியோ, தொலைக்காட்சி, விளம்பரம் ஆகியவற்றோடு இதழியல் குறித்த பாடமும் கற்றுத் தரப்படுகிறது. படிப்பின் இடையில் செயல் திட்டமும் உண்டு.

உயிர்த் தொழில் நுட்பம்

வருங்காலத்தில் உலகத்தை ஆளப்போவது உயிர்த் தொழில் நுட்பம் எனப்படும் பயோடெக்னாலஜி துறையாகும். தாவர மற்றும் விலங்கு செல்கள், கண்ணுக்குத் தெரியாத பாக்டீரியா, பூஞ்சைகள், ஈஸ்ட், வைரஸ் ஆகியவற்றைப் பயன்படுத்தி மக்களுக்குப் பயன்படும் புதிய பொருட்களை உருவாக்குவது இத்துறையாகும். மேலும் நுண்ணுயிரியல், உயிர்த் தகவலியல், உயிர் வேதியியல், புவியியல், ஜியாலஜி, மனையியல், உணவுத் தொழில் நுட்பம், ஊட்டச் சத்து மற்றும் உணவுக் கட்டுப்பாட்டுக் கல்வி, ஹோட்டல் மேலாண்மை, ஆடைகள் வடிவமைப்பு மற்றும் பால் பண்ணைத் தொழில் குறித்த படிப்புகள் இன்று பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

சட்டத்தின் முன்னர் அனைவரும் சமம் என்ற வாக்கிற்கு ஏற்ப, சட்டம் மற்றும் அது தொடர்பான கல்வியைக் கற்றுத் தரும் கல்விக் கூடங்களில் ஏராளமானவர்கள் பயின்று வருவது நம்நாட்டின் கல்வித்துறைக்குப் பெருமையாகும்.



கணினி சித்திரக் கலை (அனிமேஷன்)

தகவல் தொழில் நுட்பத்துறையில் கணினி சித்திர வரைகலை படிப்பு மிகவும் சிறப்பான வளர்ச்சியைப் பெற்று வருகிறது. கலையும் அறிவியலும் சங்கமிக்கும் இத்துறை சார்ந்த படிப்புகள் இளைஞர்கள் மத்தியில் சிறப்பான இடத்தைப் பெற்று வருகின்றன. கம்ப்யூட்டர் அனிமேஷன் எனப்படும் கணினி சித்திர வரைவுகள் இன்று அனைத்துத் துறைகளிலும் பெரிய அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இன்று ஏராளமான கல்வி நிறுவனங்களில் இப்படிப்பு சொல்லித் தரப்படுகிறது. இப்படிப்பை படித்தவர்களுக்குத் தொழிற்சாலைகள், ஆய்வுக் கூடங்கள், திரைப்படத் துறை, தொலைக்காட்சி, விளம்பர நிறுவனங்கள் போன்றவற்றில் அதிக அளவில் வேலை வாய்ப்புகள் உள்ளன.

மேலும் நூலகம் மற்றும் தகவல் அறிவியல், இதழியல், புத்தக வெளியீடு, விளம்பரம், சுற்றுலா மற்றும் பயணம், மக்கள் தொடர்பு, விமான ஓட்டுனர் கல்வி, தகவல் தொழில் நுட்பம் சார்ந்த படிப்புகள், மானுடவியல், வானியல், பிளாஸ்டிக் மற்றும் தோல் தொழில்நுட்பம் சார்ந்த படிப்புகள், சுற்றுச்சூழல் கல்வி, வடிவமைப்புக் கல்வி, ஃபேஷன் தொழில் நுட்பம், மறுவாழ்வுப் படிப்புகள், சமூகப் பணி, ஆசிரியர் பயிற்சிக் கல்வி, விளையாட்டு மற்றும் உடற்பயிற்சிக் கல்வி, மேலாண்மை சார்ந்த படிப்புகள் போன்றவைகளும் முக்கியத்துவம் வாய்ந்த படிப்புகளாகும்.

போன்றவை பல் மருத்துவர்களின் பணியாகும். பி.டி.எஸ்., எனப்படும் பேச்சிலர் ஆஃப் டெண்டல் சர்ஜரி என்ற இளநிலைப் பட்டம் பெற்றவர் பல் மருத்துவராக முடியும்.

ஹோமியோபதி மருத்துவம்

ஹோமியோபதி மருத்துவர் ஆக வேண்டுமெனில் ஹோமியோபதி மெடிசின் அண்ட் சர்ஜரி (பி.எச்.எம்.எஸ்.) என்ற இளநிலைப் பட்டம் பெற வேண்டும். இம்மருத்துவ முறையில் நோயாளிகளின் மனநிலையையும், உணர்ச்சிகளையும் கருத்தில் கொண்டு சிகிச்சை அளிக்கப்படுவதால் ஹோமியோபதி மருத்துவம் படித்தவர் மருத்துவர் மட்டுமல்ல, உளவியல் நிபுணருமாவார் என்பது சிறப்பு. மேலும் ஆயுர்வேத மருத்துவம், யுனானி மருத்துவம், சித்த மருத்துவம், இயற்கை மருத்துவம் மற்றும் யோகா அறிவியல் போன்ற படிப்புகளுக்கும் மருத்துவத் துறையில் சிறப்பான வேலை வாய்ப்புகள் உள்ளன.

செவிலியர் (நர்சிங்) படிப்புகள்

செவிலியர் பணி என்பது மருத்துவத்துறையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பணியாகும். செவிலியர் பணி, மருத்துவத்துறை உதவியாளர் பணி குறித்த படிப்புகளும் ஏராளமாக உள்ளன. மன நிறைவு தருவதாலும், வேலை வாய்ப்பை எளிதில் பெற்றுத் தருவதாலும் நர்சிங் படிக்க விரும்புபவர்களின் எண்ணிக்கை நாள்தோறும் உயர்ந்து கொண்டே இருக்கிறது. செவிலியர் ஆக வேண்டுமென்றால் பி.எஸ்.சி. (நர்சிங்) பட்டப் படிப்பு, டிப்ளமோ இன் நர்சிங், சர்டிபிகேட் இன் நர்சிங், ஜெனரல் நர்சிங் அண்ட் மிட்ஒய்ஃபரி, ஆண் செவிலியர் படிப்பு மற்றும் ஆக்சிலரி நர்சிங் அண்ட் மிட்வைஃபரி என்ற படிப்புகள் உள்ளன

மேலும் ஃபிசியோதெரபி, எமர்ஜென்ஸிகேர் டெக்னீஷியன், அனஸ்தீசியா டெக்னீஷியன், ஆர்த்தோபிடிக் டெக்னீஷியன், டிப்ளமோ இன் மெடிக்கல் லேப் டெக்னீஷியன், லேப் டெக்னீஷியன் மற்றும் டயாலிசிஸ் டெக்னீஷியன் போன்ற படிப்புகளும் வேலை வாய்ப்புகளை எளிதில் பெற்றுத் தரும் படிப்புகளாக உள்ளன.

மருந்தியல் படிப்பு

நோயாளிகளுக்கு உரிய நேரத்தில் தக்க மருந்துகளைத் தருவதற்கு மருந்தியல் படித்தவர்கள் வேண்டும். பி.பார்ம்., டி.பார்ம்., போன்ற மருந்தியல்படிப்புகளைப்படிப்பதன்மூலம்மருந்துவிற்பனைப்பிரதி நிதிகள், மருந்து தயாரிப்பு நிறுவனங்கள், மருந்து ஆய்வகங்கள், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் பணி புரியலாம். மருத்துவம் சார்ந்த படிப்புகள் மட்டுமல்லாது மருத்துவத்துறைக்கு உதவியாகப் பல்வேறு பணிகளுக்கும் ஏற்ற படிப்புகள் அதிக அளவில் உள்ளன. அவைகளில் சேர்ந்து பயில்பவர்களுக்கு வேலைவாய்ப்புகளும் அதிகமாக உள்ளன. நோயாளிகளுக்குத் தரப்படும் மருந்துகள் குறித்தும், அவைகளின் தன்மை குறித்தும் அறிந்து கொள்வதற்குப் பல்வேறு படிப்புகள் உள்ளன. அவைகள் அதிக வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தருபவையாக உள்ளன.

பொறியியல் படிப்புகள்

தற்போது பொறியியல் படித்தவர்களின் தேவை அதிகமாக உள்ளதால் பொறியியல் படிப்பு எளிதில் வேலைவாய்ப்பைப் பெற்றுத் தரும் படிப்பாக முதலிடத்தில் உள்ளது. அண்ணா பல்கலைக் கழகத்தின் கீழ் தமிழகம் முழுவதும் அரசு மற்றும் தனியார் பொறியியல் கல்லூரிகள் ஏராளமாக உள்ளன. இக்கல்லூரிகளில் ஏறத்தாழ 50 விதமான பொறியியல் படிப்புகளில் ஆண்டுதோறும் இலட்சக்கணக்கானவர்கள் படித்து பட்டம் பெறுகின்றனர். கணிப்பொறி அறிவியல், மின்னணுவியல், மின்னியல், தகவல் தொழில்நுட்பம், கட்டிடவியல், உலோகவியல் மற்றும் மெக்கானிக்கல் ஆகிய பிரிவுகளில் உள்ள பொறியியல் படிப்புகள் மிகவும் முக்கியமானவை ஆகும்.

பாலிடெக்னிக் படிப்புகள்

பாலிடெக்னிக் எனப்படும் பல்தொழில்நுட்பக் கல்வி, மூன்றாண்டு டிப்ளமோ படிப்பாகும். பாலிடெக்னிக் படிப்பை முடித்தவர்கள், பொறியியல் படிப்பில் இரண்டாம் ஆண்டிலிருந்து சேர்ந்து படிக்கலாம். இப்படிப்பினை படிப்பவர்களுக்கும் வேலைவாய்ப்பு எளிதில் கிடைப்பதால் இதுவும் சிறந்த படிப்பாகும்.

தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள்

வளர்ந்து வரும் தொழில் வளர்ச்சிக்கு ஏற்ப, சிறந்த நிபுணர்களை உருவாக்கும் வகையில் தரமான தொழிற்பயிற்சிகளை வழங்கும் கல்வி நிறுவனங்கள் இன்று நம் மாநிலத்தில் அதிகம் உள்ளன. நமது நாட்டில் தலைசிறந்து விளங்குபவை ஐ.ஐ.டி. எனப்படும் இந்திய தொழில்நுட்ப நிறுவனங்களே. இங்கு படிப்பதற்கு வாய்ப்பு

கிடைத்து விட்டால், எதிர்காலம் குறித்த கவலை எதுவும் தேவையில்லை. படிப்பை முடிக்கும் முன்பே வளாக நேர்முகத் தேர்வு மூலம் அதிக சம்பளத்தில் வேலைவாய்ப்பு கிடைக்கும். இந்தியாவில் மும்பை, கோரக்பூர், புதுதில்லி, சென்னை, கௌகாத்தி, ரூர்க்கி மற்றும் கான்பூர் ஆகிய இடங்களில் ஐ.ஐ.டி. நிறுவனங்கள் உள்ளன.

வேளாண்மைக் கல்வி

நம் நாட்டில் வேளாண்மை மிக முக்கியத் தொழிலாக உள்ளது. அதிக பரப்பளவில் வேளாண்மை நடைபெறுகிறது. வேளாண்மையில் நவீன உத்திகளைப் புகுத்தும் வகையில் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. விவசாயத் துறையில் பயன்படுத்தப்படும் கருவிகளிலும் பல்வேறு புதுமைகள் புகுத்தப்பட்டு, விவசாயப் பொருட்களின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டு வருகின்றது.

வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த பல்வேறு தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் வேளாண்மை குறித்த படிப்புகள், வேளாண்மைக் கல்லூரிகளில் நடத்தப்பட்டு வருகின்றன. இளங்கலை அறிவியல் (வேளாண்மை) என்ற படிப்பு வேளாண்மை குறித்த படிப்புகளில் முக்கியமானது.

பி.டெக். (வேளாண்மைப் பொறியியல்)

இயற்கை வளங்களை திறமையாகப் பயன்படுத்தி, வேளாண் உற்பத்தியைப் பெருக்கிட, பொறியியல் அறிவை எப்படிப் பயன்படுத்தலாம் என்பது குறித்த இப்படிப்பை முடித்தவர்களுக்கு வேளாண்மைக் கருவிகள் மற்றும் உபகரணங்கள், பண்ணை இயந்திரங்கள் செய்யும் நிறுவனங்களில் வேலைவாய்ப்புகள் கிடைக்கின்றன.

பி.டெக். (வேளாண்மை உயர் தொழில் நுட்பம்)

அண்மைக் காலமாகப் பிரபலமடைந்து வரும் வேளாண்மைப் படிப்பு இதுவாகும். அறிவியலில் ஏற்பட்டுள்ள மாபெரும் முன்னேற்றங்களைக் கொண்டு உயர் தொழில் நுட்பத்தை விவசாய மேம்பாட்டுக்குப் பயன்படுத்துவது குறித்த படிப்பு என்பதால் இப்படிப்பை மேற்கொள்பவர்களுக்கு வேலைவாய்ப்புகள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஏராளமாக உள்ளன.

பி.எஸ்.சி., (உணவு பதப்படுத்தும் அறிவியல்)

சுவையும், சுகாதாரமும் மிகுந்த உணவுப் பொருட்களைத் தயாரித்தல், பதப்படுத்துதல் ஆகியவை உணவுப் பதப்படுத்தல் குறித்த படிப்புகளில் கற்றுத் தரப்படுகின்றன.

கணிப்பொறி அறிவியல்

+2 படிப்பில் கணினி அறிவியல் படிப்பவர்கள் மேற்படிப்பிற்குத் தேர்ந்தெடுப்பது இளங்கலை கணிப்பொறி அறிவியல் படிப்பாகும். இதில் கணினியில் பயன்படுத்தப்படும் மென்பொருள் மற்றும் வன்பொருள் ஆகியவற்றின் அடிப்படை விவரங்கள் கற்றுத் தரப்படுகின்றன. இப்படிப்பை முடிப்பவர்கள் மேற்கொண்டு எம்.எஸ்.சி., எம்.சி.ஏ., முதுகலை டிப்ளமோ உள்ளிட்ட கணினி சார்ந்த படிப்புகளை படிக்கலாம்.

கம்ப்யூட்டர் அப்ளிகேஷன்ஸ் (பி.சி.ஏ.)

தற்போது இத்துறைப் படிப்பு பிரபலமாகி வருகிறது. தனியார் துறை மற்றும் கணிப்பொறி சார்ந்த அனைத்து நிறுவனங்களிலும் இப்படிப்பு படித்தவர்களுக்கு ஏராளமான வேலைவாய்ப்புகள் உள்ளன. எம்.சி.ஏ. போன்ற மேற்படிப்பையும் படிக்கலாம்.

கால்நடை மருத்துவ அறிவியல்

கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களைக் கண்டறிந்து அவற்றைத் தீர்க்கவும், கலப்பினக் கால்நடைகளை உருவாக்கவும், கால்நடை மருத்துவ அறிவியல் கல்வி அவசியமாகிறது. தமிழகத்தில் சென்னை மற்றும் நாமக்கல்லில் அமைந்துள்ள கால்நடை மருத்துவக் கல்லூரிகள், தூத்துக்குடியில் அமைந்துள்ள மீன்வளக் கல்லூரி போன்றவைகளில் கால்நடை மருத்துவப் படிப்பு உள்ளது.

கடல் சார்ந்த கல்வி

மூன்று புறமும் அலைகடல் கொண்ட நம்நாட்டில் கடல் சார்ந்த தொழில்களின் வளர்ச்சி அதிகரித்த வண்ணம் உள்ளன. அவைகளுக்கு ஏற்ற கல்வியினைக் கற்றுத் தரும் கல்லூரிகளும் ஏராளமாக உள்ளன. கடலியல், கப்பல் பணி, கப்பல் பொறியியல் போன்ற படிப்புகளைப் பரங்கிப்பேட்டையில் உள்ள கடல் வாழ் உயிரின மேனிலை ஆராய்ச்சி மையம் மற்றும் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் போன்றவற்றில் படிக்கலாம்.

இப்படிப்புகளை அளிக்கும் கல்வி நிறுவனங்கள் நம் நாட்டில் ஏராளமாக உள்ளன. அறிவியல் தொழில் நுட்பங்களின் உதவியுடன் உணவுப் பொருட்களைப் பதப்படுத்தி நீண்ட காலத்திற்குப் பயன்படுத்தும் முறை குறித்த படிப்பு இதுவாகும்.

மேலும் பல்வேறு வகையான படிப்புகளை வழங்கும் பல்கலைக் கழகங்களும், கல்லூரிகளும் நமது மாநிலத்தில் அதிகளவில் உள்ளன. அவைகளில் சேர்ந்து பயில்வதற்காக நாட்டின் அனைத்து மாநிலங்களில் இருந்தும் அயல்நாடுகளில் இருந்தும் ஏராளமானவர்கள் வருகின்றனர்.

தற்போது அனைத்து துறைகளிலும் வளர்ச்சியும் எதிர்காலமும் உள்ளது. எனவே கல்வியில் உயர்வு தாழ்வு கருதாமல், அனைத்துக் கல்வியையும் சமமாக நினைத்து மாணவர்கள் பயின்றிட முன்வர வேண்டும். கல்வி மட்டுமே எதிர்காலத்தை வளமானதாக்கும் எனவே மாணவர்களே கல்வி கற்றிடுங்கள். வாழ்வில் வெற்றி பெற்றிடுங்கள். ■

பத்மா வெங்கடேசன்,
மேலாளர், இந்தியன் வங்கி

பெண்களின் முன்னேற்றத்திற்காக வங்கிகள்...

வங்கி கணக்கு என்பது பெண்களின் பொருளாதார ஏற்றத்திற்கு ஏற்பட்ட கட்டாய கடவுச் சீட்டு (Passport) என்று சென்ற வாரங்களில் தெரிந்து கொண்டோம். வங்கியில் சேமிப்புக் கணக்கு, தொடர் வைப்பு கணக்கு, மாறுபட்ட தொடர் வைப்பு கணக்கு பற்றி விரிவாகப் பார்த்தோம். சேமிப்புக் கணக்கு என்பது வாழ்க்கையில் சாதிக்க ஏற்படுத்தப்பட்ட ஒன்று என்றால் மிகையாகாது. அதிலும் குறிப்பாக நிரந்தர வைப்புத் திட்டம் நம் வாழ்க்கையை முன்னேற்றப் பாதையில் எடுத்துச் செல்லும் வடம் பிடிக்கும் கயிறு என்றே கூறலாம்.

நிரந்தர வைப்புத் திட்டம் (Fixed Deposit)

இந்த கணக்குத் துவங்க குறைந்தபட்சமாக ரூ. 100/– செலுத்தினாலே போதுமானது. அதிகபட்சம் என்று எதுவுமே கிடையாது. காலவரையறை 15 நாட்கள் முதல் 10 ஆண்டுகள் வரை. 1 லட்சத்திற்கு மேல் முதலீடு செய்தால் காலவரை 7 நாட்கள் முதல் 10 ஆண்டுகள் வரை. வைப்புத் தொகை மீது கடன் பெறும் வசதியும் உண்டு. இத்திட்டத்தில் நியமானதாரர் (Nomination) வசதி உள்ளது. இதில் சேரும் வட்டி மூன்று மாதத்திற்கு ஒருமுறை நம் கணக்கில் சேரும் என்பது குறிப்பிடத்தக்கது. தேவையானால் வட்டியில் சிறு தள்ளுபடியும் செய்து மாதா மாதம் பெற்றுக் கொள்ளலாம். குறிப்பிட்ட காலவரையறை முடியும் முன்னரே கூட இந்த கணக்கை நாம் முடித்துக் கொள்ள அபராதம் எதுவும் கிடையாது. எவ்வளவு காலத்திற்கு வைப்புத் தொகை வைக்கப்பட்டதோ, அக்காலத்திற்கு நிர்ணயித்த வட்டி விகிதம் அளிக்கப்படும்.

மறு முதலீட்டுத் திட்டம் (Reinvestment Plan - RIP)

இது ஒரு மிகச் சிறந்த சேமிப்புத் திட்டம். குறைந்த பட்சமாக ரூ. 100/– செலுத்தி கணக்கை துவங்கலாம். அதிகபட்ச தொகை என்று எதுவும் கிடையாது. காலவரையறை 6 மாதம் முதல் 10 ஆண்டுகள் வரை. அதில் சேரும் வட்டி மூன்று மாதத்திற்கு ஒருமுறை நம் கணக்கில் சேரும் என்பது குறிப்பிடத்தக்கது. வட்டியுடன் கூடிய தொகையை கணக்கு முடியும் காலத்தில் பெற்றுக் கொள்ளலாம். இக்கணக்கில் கடன் பெறும் வசதியும் உண்டு. இத்திட்டத்தில் நியமனதாரர் (Nomination) வசதி உள்ளது. குறிப்பிட்ட காலவரையறை முடியும் முன்னரே கூட இந்த கணக்கை நாம் முடித்துக் கொள்ள எந்த அபராதமும் கிடையாது. எவ்வளவு காலத்திற்கு வைப்புத் தொகை வைக்கப்பட்டதோ, அக்காலத்திற்கு நிர்ணயித்த வட்டி விகிதம் அளிக்கப்படும்.

வாருங்கள், இத்திட்டங்களில் முதலீடு செய்து வளமான வாழ்க்கைக்கு வித்திடுங்கள்.

மீண்டும் வளரும் அடுத்த இதழில்..

மேலும் விபரங்களுக்கு இந்தியன் வங்கி,
கார்ப்பரேட் அலுவலகத்தை அணுகவும் போன்: 2813 4036

(தொடரும்)

இங்கிலீஷ்ல பேசலாம் ஈஸியா...

2000 ஆங்கில வார்த்தைகள் தெரிந்து கொள்வோம்

பகுதி - 13

அன்பார்ந்த வாசகர்களே, பல்வேறு பணிகளை செய்பவர்கள் எவ்வாறு ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின்றனர் என்பதை இம்மாதம் அறிந்து கொள்வோம் வாருங்கள்.

தச்சர்	Carpenter-கார்பென்டர்
கருமார்	Blacksmith-ப்ளாக்ஸ்மித்
பூ விற்பவர்	Florist-ஃப்ளோரிஸ்ட்
தோட்டக்காரர்	Gardener-கார்டனர்
பொற்கொல்லர்	Goldsmith-கோல்ட்ஸ்மித்
விறகு வெட்டுபவர்	Woodcutter-வுட் கட்டர்
சிலை வடிப்பவர்	Sculptor-ஸ்கல்ப்டர்
மாடு மேய்ப்பவர்	Cowherd-கஃவ்ஹர்ட்
கட்டிடம் கட்டுபவர்	Mason-மேஸன்
துணி தைப்பவர்	Tailor-டெய்லர்

விவசாயி	Farmer-ஃபார்மர்
செவிலியர்	Nurse-நர்ஸ்
நாவிதர்	Barber-பார்பர்
நெசவாளர்	Weaver-வீவர்
குயவர்	Potter-ஃபோட்டர்
நடிகர்	Actor-ஆக்டர்
பாடகர்	Singer-ஸிங்கர்
ஆசிரியர்	Teacher-டீச்சர்
போர் வீரர்	Soldier-ஸோல்ஜர்
நாட்டியக்காரர்	Dancer-டான்ஸர்

(தொடரும்)

மே 1 உலகத் தொழிலாளர் தினம்

மே தினம் எனப்படும் உலகத் தொழிலாளர் தினம் ஆண்டுதோறும் மே மாதம் முதல் தேதியன்று உலகெங்கும் தொழிலாளர்களால் சிறப்புற கொண்டாடப்படுகிறது. 18ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் – 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழிலாளிகள் பலரும் நாளொன்றுக்கு 12 முதல் 18 மணி நேரம் கட்டாய வேலை செய்ய நிர்பந்திக்கப்பட்டனர். இதற்கெதிரான குரல்களும் பல்வேறு நாடுகளில் ஆங்காங்கே எழத் துவங்கியது.

அமெரிக்காவில் 'அமெரிக்க தொழிலாளர் கூட்டமைப்பு' என்ற இயக்கம் உருவாக்கப்பட்டது. இவ்வியக்கம் 8 மணி நேர வேலை என்ற கோரிக்கையை முன்வைத்து தொடர்ந்து இயக்கங்களை நடத்தி வந்தது. மே 3, 1886 அன்று சிக்காகோ 'மெக்கார்மிக் ஹார்வஸ்டிங் மெஷின் நிறுவனத்தின்' வாயிலில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் ஏற்பட்ட கலவரத்தில் 4 தொழிலாளர்கள் காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாயினர். இச்சம்பவத்தைக் கண்டித்து ஹே மார்க்கெட் சதுக்கத்தில் மே 4 அன்று கண்டனக் கூட்டம் ஒன்று அமைதியான முறையில் நடைபெற்றது. அப்போது வெடிகுண்டு வீசப்பட்டதில், காவல் துறையைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார். இதனால் கோபமுற்ற காவல்துறையினர் கூட்டத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியதுடன் தொழிலாளர் தலைவர்களையும் கைது செய்து வழக்குத் தொடுத்தனர். இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட தொழிலாளர் தலைவர்கள் 7 பேர்களுக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டு, 1887 நவம்பர் 11 அன்று அந்த தண்டனைநிறைவேற்றப்பட்டது. சிகாகோ தியாகிகளின் தியாகமும், இடையறாத உரிமைப் போராட்டமும் தான் இன்றைக்கு மே தினமாக – உழைப்பவர் தினமாக நம் முன் நிற்கிறது.

இந்தியாவில் மே தினம்

இந்தியாவில் சென்னை மாநகரில் தான் முதன்முதலில் தொழிலாளர்தினம்கொண்டாடப்பட்டது. பொதுவுடமை வாதியும், தலைசிறந்த சீர்திருத்தவாதியுமான ம. சிங்காரவேலர், 1923இல் சென்னை உயர்நீதி மன்றம் அருகே உள்ள கடற்கரையில் தொழிலாளர் தின விழாவை கொண்டாடினார். ■

கால்நடை நலம்...!

நலம் காண ஆவல்...!!

குடற்புழுவினால் ஏற்படும் தீமைகள்

கன்றுகளின் உடல் வளர்ச்சியை பாதிக்கும்.
உடல் மெலிந்து, ரோமங்கள் இயல்புக்கு மாறாக சுருண்டும், மெல்லியதாகவும் காணப்படும்.
வயிற்று பகுதி பெரிதாக பானை போன்று காணப்படும்.
சில புழுக்கள் இரத்தத்தை உறிஞ்சும் தன்மை கொண்டவை.
நோய் எதிர்ப்பு சக்தியை குறைக்கும். சினை பிடிப்பதில் தாமதம் ஏற்படும். இளம் கன்றுகள் இறக்கவும் நேரிடும்.

தடுப்பு முறைகள்

பசுங்கன்று பிறந்த 2வது வாரம் – உருண்டை புழுக்களுக்கான மருந்து, ஐந்தாம் வாரம்– உருண்டை புழுக்களுக்கான மருந்து, 3ஆம் மாதம்– உருண்டை புழுக்களுக்கான மருந்து, 6வது மாதம் – நாடாப்புழு, தட்டை புழுக்களுக்கான மருந்து, 12ஆம் மாதம் – நாடாப்புழு, தட்டை புழுக்களுக்கான மருந்தினை மருத்துவரின் ஆலோசனைப்படி கொடுக்க வேண்டும் ■

டாக்டர். P. துரைராசன்,
கால்நடை மருத்துவர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
சென்னை.

பாட்டி வைத்தியம்

இளம் கன்றுகளுக்கு மாதம் ஒருமுறை வேப்பங்கொழுந்து இலைகளை நன்கு அரைத்து, கோலிகுண்டு அளவிற்கு கொடுத்தால் குடற்புழுக்கள் அழிந்து விடும்.

சத்தும் சுவையும் நிறைந்த பிரண்டை துவையல்

திருமதி. சாந்தா புவராகன்,
திருச்சிராப்பள்ளி.

தேவையானப் பொருட்கள்

மேல் தோல் சீவி, கணுக்களை அகற்றி, துண்டு துண்டாக நறுக்கிய பிரண்டை இரண்டு கை அளவு – உளுத்தம் பருப்பு – 1 டீஸ்பூன், மிளகாய் – 2, மிளகு – 1/2 டீஸ்பூன், தேங்காய் துருவல் – அரை மூடி, புளி, கருவேப்பிலை சிறிதளவு, நெய் அல்லது நல்லெண்ணை மற்றும் உப்பு, கடுகு, எள் தேவையான அளவு.

செய்முறை

அடுப்பில் வாணலியை வைத்து, வெறும் வாணலியில் எள்ளைப் போட்டு அது வெடிக்கும் வரை வறுத்து தனியாக எடுத்து வைக்கவும். பிறகு வாணலியில் எண்ணை ஊற்றி எண்ணை காய்ந்ததும், அதில் நறுக்கி வைத்துள்ள பிரண்டையை போட்டு சிறிது நேரம் வதக்கி தனியாக எடுத்து வைத்துக் கொள்ளவும். அதே வாணலியில் சிறிது எண்ணெய் ஊற்றி சூடுபடுத்தவும். எண்ணெய் காய்ந்ததும் அதில் உளுத்தம் பருப்பு, மிளகாய், மிளகு, புளி, எள், கருவேப்பலை, தேங்காய் துருவலுடன் தேவைக்கேற்ப உப்பு சேர்த்து பொன்னிற மாக வறுக்கவும். இந்தக் கலவையுடன், தனியாக வைத்துள்ள பிரண்டையை சேர்த்து, மிக்ஸியில் போட்டு கரகரப்பாக அரைக்கவும். வாணலியில் சிறிது எண்ணெய் விட்டு கடுகை தாளித்து, அரைத்து வைத்துள்ள பிரண்டை கலவையை கைபடாமல் கரண்டியில் எடுத்து வாணலியில் போட்டு வதக்கவும். சூடு ஆறியதும் காற்று புகாத பாத்திரத்தில் இந்த பிரண்டை துவையலை எடுத்து வைத்துக் கொண்டு, தினமும் சாதத்தில் பிசைந்து சாப்பிடலாம். (கைபடாமல் இருந்தால் இந்த துவையல் ஒரு வாரம் வரை கெடாது)

இந்த பிரண்டை துவையலை சாப்பிட்டு வந்தால், உடல் எலும்பு உறுதியாகும்; நல்ல பசி எடுக்கும்; ஜீரண சக்தி பெருகும்; மலச் சிக்கல் தீரும்; பெண்களின் மாதவிடாய் சீராகும்; 5 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு நெய் சேர்த்து சாதத்துடன் பிசைந்து ஊட்ட ஞாபகசக்தி, மூளை வளர்ச்சி பெருகும்.

பிரண்டையை அரைத்து வடிகட்டி சாறு எடுத்து சிறிது சுட வைத்து, தோசை மாவில் கலந்து தோசை வார்த்தால், தோசை சுவையாக இருக்கும். ■

மருத்துவ குணங்கள் நிறைந்த சீரகம்

சீர்+அகம் = சீரகம். அகத்தை அதாவது நமது இரைப்பையை சீராக இயங்க வைக்கும் ஓர் முக்கியமான உணவு பொருள் சீரகம். காரச்சுவையுடைய சீரகம், செரி மானத்தைத் தூண்டும் இயல்புடையது. சீரகத்தில் இரும்புச் சத்தும், மாங்கனீசிய சத்தும் நிறைந்து உள்ளன. இரும்புச் சத்து அதிகம் உள்ளதால் பிராண வாயுவை நம் உடலில் உள்ள செல்களுக்கு அளித்து புத்துணர்ச்சியளிக்கின்றது. ஈரலை நன்கு வேலை செய்ய தூண்டி, நம் உடலில் உள்ள நஞ்சுகளை வெளியேற்றி உடலுக்கு புத்துணர்ச்சி அளிக்கின்றது. உடலுக்கு குளிர்ச்சியும், பளபளப்பும் தரும் ஆற்றல் சீரகத்திற்கு உண்டு.

உடல் எடை குறைக்க விரும்புபவர்கள் சீரகத் தண்ணீரை இளம் சூட்டுடன் உணவிற்கு பத்து நிமிடத்திற்கு முன்பும், உணவு உண்ட பத்து நிமிடத்திற்கு பின்பும் அருந்த, உணவு நன்கு ஜீரணமாகி, கொழுப்புகள் உடலில் தங்காமல் இருக்கும்.

சீரகத்தை வறுக்கும் பொழுது நறுமண எண்ணெய் வெளிவரும். அப்போது நீர் ஊற்றி கொதிக்க வைத்து அந்த நீரை பருகும் போது சீரகத்தின் பலன் அதிகரிக்கும். குழந்தை பெற்ற பெண்கள், இந்த சீரக நீரை பருக தாய்ப்பால் பெருகும். கருப்பை பலப்படும். குழந்தை பெற்றதால் கருப்பையில் உண்டான அழற்சி நீங்கும். ■

சீரகத்தை நன்கு வறுத்து ஒரு டம்ளர் நீர் ஊற்றி கொதிக்க வைத்து, வடிகட்டி ஒரு தேக்கரண்டி தேன் கலந்து கொடுத்தால், இளம் பெண்களுக்கு மாதவிடாய் காலங்களில் ஏற்படும் வயிற்று வலி குறையும்

முகம்-கழுத்து கருப்பதை தடுக்க...

வெதுவெதுப்பான நீரால் முகத்தை கழுவி, வீட்டிலேயே பழக்கலவை தயாரித்து பூசலாம். சிறுதுண்டு பப்பாளி, வாழைப்பழம் சிறு விள்ளல் ஆகியவற்றை மசித்து கால் டீஸ்பூன் எடுத்துக் கொள்ளவும். அதனுடன் ஒரு டீஸ்பூன் காய்ச்சாத பால் மற்றும் கால் டீஸ்பூன் கோதுமை மாவை சேர்த்து பேஸ்டாக்கி கண் மற்றும் புருவங்களின் மேல் படாமல் முகத்திலும், கழுத்திலும் நன்றாக தடவவும். பன்னீரில் பஞ்சை நனைத்து கண்களின் மீது வைத்து 15 நிமிடம் ரிலாக்ஸ் செய்யவும். பிறகு குளிர்ந்த நீரால் முகத்தை கழுவவும். முடிந்தால் ஐஸ்கட்டியால் தேய்த்து விடவும். நாளடைவில் முகத்தில் உள்ள கருப்பு நீங்கி விடும்.

பயனுள்ள குறிப்புகள்...

பெண்களின் உடல் நலத்தைக் காக்கும் உணவுகள்

பெண்கள் உடல் நலம் காக்க

கீழ்க்கண்ட ஐந்து உணவு வகைகளை அனைத்துப் பெண்களும் உண்ண வேண்டும் என ஊட்டச்சத்து நிபுணர்கள் மற்றும் மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றனர்.

கீரை வகைகள்

பசலைக்கீரை, அவரை, வெந்தயக் கீரை ஆகியவற்றை பெண்கள் கட்டாயம் தங்களது உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவற்றில் உள்ள வைட்டமின் சி, கே மற்றும் ஃபோலிக் அமிலம் ஆகியவை கண் பார்வைக்கு மிகவும் நல்லது. அத்துடன் உடல் நலத்திற்கு மிகவும் பயனளிக்கக் கூடிய கால்சியம், மெக்னீசியம், இரும்பு மற்றும் பொட்டாசியம் ஆகிய நான்கு அத்தியாவசிய சத்துக்களும் கீரைகளில் அடங்கியுள்ளன.

முழு தானியங்கள்

முழு தானியங்களில் 96 விழுக்காடு வரை நார்ச்சத்து, அத்தியாவசிய ஊட்டச்சத்து மற்றும் வைட்டமின்கள் அடங்கியுள்ளன. இவை உடல் எடையை அதிகரிக்கச் செய்யாது என்பதால் அனைவரும் அச்சமின்றி உண்ணலாம்.

கொட்டைப் பருப்புகள்

புரதம், மெக்னீசியம், பி மற்றும் இ வைட்டமின் சத்துக்களைக் கொண்ட பாதாம், முந்திரி போன்ற கொட்டைப் பருப்புகளை அவசியம் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இருதயத் திற்கு நன்மை செய்யும் நல்ல கொழுப்புகளைக் கொண்ட இந்த கொட்டைப் பருப்புகள் இருதயநோய் மற்றும் புற்று நோய்க்கு

> கோடை காலத்தில் வெதுவெதுப்பான தண்ணீரில் குளித்து வந்தால், சருமம் வறட்சியடையாது.

எதிராக போராடும் ஆற்றல் கொண்டவை. காலை மாலைசிற்றுண்டி, சாலட் மற்றும் தயிருடன் சேர்த்து இவைகளை உண்ணலாம். அதிக எண்ணிக்கையில் சாப்பிடக் கூடாது. ஒரு நபருக்கு ஒரு வாரத்தில் 15 முதல் 20 எண்ணிக்கையிலான பாதாம், முந்திரி, அக்ரூட் போன்றவைகள் போதும்.

தயிர்

குறைந்த கொழுப்புடைய அல்லது கொழுப்பற்ற தயிரில் வைட்டமின்கள், புரதம், கால்சியம் மற்றும் உடலுக்கு நன்மை பயக்கும் பாக்டீரியாவும் உள்ளது. ஒரு நபருக்கு வாரம் ஒன்றிற்கு மூன்று முதல் நான்கு கோப்பை தயிர் போதுமானது. தயிரில் சர்க்கரை சேர்த்துக் கொள்ளக் கூடாது. பழங்கள், பெர்ரி போன்றவற்றை சேர்த்துக் கொள்ளலாம்.

நாவற்பழம்

அதிக அளவு நார்ச்சத்தும், ஆண்டாசிடென்ஸும் கொண்ட நாவற்பழம் உடல் எடையைக் குறைக்க உதவுவதோடு, ஞாபகமறதி ஏற்படுவதையும் தடுக்கிறது. ஒரு நபர் வாரம் மூன்று முறை ஒரு கிண்ணம் நிறைய உட்கொண்டால் போதும்.■

இயற்கைப் பொருட்களால் கிடைக்கும் நன்மைகள்!

அத்திப்பழம்

ஆரோக்கியத்தையும் அழகையும் தரும் அத்திப் பழத்தில் நார்ச்சத்து, வைட்டமின் பி, கே, கால்சியம், மாங்கனீசு, நார்ச்சத்து, பொட்டாசியம், கால்சியம் ஆகியவை உள்ளன. இந்தப் பழத்தை சாப்பிடுவதால் உடல் பருமனும், உயர் இரத்த அழுத்தமும் கட்டுப்படுத்தப்படுகிறது. இரும்புச் சத்து நிறைந்த இந்தப் பழம் இரத்த சோகை நோய் ஏற்படாமல் தடுக்கப்படுகிறது. ■

வெண்டைக்காய்

வெண்டைக்காயின் காய், இலை, விதை, வேர் அனைத்துமே மருத்துவ குணங்கள் நிரம்பியவை இதில் உள்ள நார்ப்பொருட்களால் கொழுப்பு கரைந்து மலச்சிக்கல் நோய் நீங்கும். இதனால் குடல் சுத்தமாவதுடன், வாய் நாற்றமும் அகலும். சிறுநீர் நன்கு பிரியவும், உடலுக்கு குளிர்ச்சியைத் தரவும், தோல் வறட்சியை நீக்கவும், உடம்பை பளபளப்பாக மாற்றவும் அரிய மருந்தாக வெண்டைக்காய் திகழ்கிறது.■

சுகாதார நாப்கின் தயாரித்து விற்பனை செய்து வரும் சுய உதவிக் குழு மகளிர்

சுகாதார நாப்கின் தயாரிப்பில்

செண்பகப்பூ மகளிர் சுய உதவிக் குழு

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், பாடியநல்லூர் ஊராட்சியில் செயல்பட்டு வரும் செண்பகப் பூ மகளிர் சுய உதவிக் குழுவினர், சுகாதார நாப்கின் தயாரிப்பில் ஈடுபட்டு, இன்று மாதந்தோறும் கணிசமான வருவாய் பெற்று வருகின்றனர். சுகாதார நாப்கின் தயாரிப்பில் ஈடுபட்டு அதில் வெற்றி பெற்றது எவ்வாறு என்று அக்குழுவின் ஊக்குநர் திருமதி ரமணி மற்றும் பிரதிநிதி சங்கீதா ஆகியோர் கூறியதாவது.

எங்கள் செண்பகப்பூ மகளிர் சுய உதவிக் குழுவில் 15 பேர் உறுப்பினர்களாக இருக்கின்றனர். ஆண்டார் குப்பம் கிளை இந்தியன் வங்கியில் சேமிப்புக் கணக்கு ஆரம்பித்து அதில் தவறாது சேமித்து வருகிறோம். எங்கள் குழுவின் சார்பில் சிறு தொழில் துவங்குவதற்கு மேற்படி வங்கியில் இருந்து நேரடிக் கடனாக ரூ. 2 இலட்சம் பெற்று, அந்தத் தொகையைக் கொண்டு குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வந்தனர். பெற்ற கடன் தொகையை 10 மாதங்களில் திரும்பச் செலுத்திவிட்டோம்.

பின்னர் தொழில் விரிவாக்கத்திற்காக ரூ. 3 இலட்சம் பெற்று, அதையும் 15 மாதங்களில் திரும்பச் செலுத்தினோம். சுழல் நிதியும் பெற்றோம். எங்கள் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் பொதுவாக தொழில் செய்ய முடிவெடுத்தோம். என்ன தொழில் செய்வது என்று கலந்தாலோசித்தோம். திருவள்ளூர் மாவட்ட மகளிர் திட்டத்தின் வாயிலாக சுகாதார நாப்கின் தயாரிப்பது குறித்த பயிற்சி வழங்கப்படுவதை அறிந்து விண்ணப்பித்தோம்.

எங்களது குழுவைச் சேர்ந்த 10 உறுப்பினர்களுக்கு பாடியநல்லூர் கூட்டமைப்பு அலுவலகத்தில் 10 நாட்கள் சுகாதார நாப்கின் தயாரிப்பு குறித்த பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சிக்குப் பின்னர் நாப்கின் தயாரிக்கும் தொழிலை மேற்கொள்ள தேவையான முதலீட்டிற்காக வங்கியை அணுகினோம். நாங்கள் சேமிப்பு கணக்கு வைத்திருக்கும் ஆண்டார் குப்பம் கிளை இந்தியன் வங்கி பொருளாதாரக் கடனாக ரூ. 5 இலட்சம் வழங்கியது. இதில் மானியம் ரூ. 1,25,000/–, கடன் ரூ. 3,75,000/– ஆகும்.

தற்போது எங்கள் குழுவின் சார்பில் சுகாதார நாப்கின் தயாரித்து வருகிறோம். நாள் ஒன்றுக்கு 400 நாப்கின் பாக்கெட்டுகள் வீதம் மாதம் ஒன்றுக்கு 10,400 நாப்கின் பாக்கெட்டுகள் தயாரிக்கிறோம். நாங்கள் தயாரிக்கும் நாப்கின்களை சுகாதார துறைக்கு பாக்கெட் ரூ. 15.60 என விற்பனை செய்கிறோம். சமீபத்தில் 90,000 நாப்கின் பாக்கெட்டுகளை சப்ளை செய்த வகையில் 1,40,400/– ரூபாயினை ரொக்கமாகப் பெற்றுள்ளோம்.

இந்தத் தொழில் மூலம் எங்கள் குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மாதம் ரூ. 5000/– வரை வருவாய் பெறுகின்றனர். வங்கியில் பெற்ற கடனையும் தவறாமல் திருப்பி செலுத்தி வருகிறோம். எங்கள் குழுவின் சார்பில் தயாரித்து வரும் சுகாதார நாப்கின்களை விரைவில் அனைத்துப் பகுதிகளுக்கும் விற்பனை செய்வதுதான் எங்கள் இலட்சியம் என்று உறுதியுடன் சொல்கின்றனர் செண்பகப்பூ மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள். ■

குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து தொழில் செய்ய முடிவெடுத்தோம். என்ன தொழில் செய்வது என்று கலந்தாலோசித்தோம். அப்போது திருவள்ளூர் மாவட்ட மகளிர் திட்டத்தின் வாயிலாக சுகாதார நாப்கின் தயாரிப்பது குறித்த பயிற்சி வழங்கப்படுவதை அறிந்து விண்ணப்பித்தோம்.

சிறந்த தொழில் முனைவோராவது எப்படி?

'தெரிந்த தொழிலை செய்தவனும் செழிப்பான். தெரியாத தொழிலை கற்றுத் தேர்பவனும் செழிப்பான்' என்பது புதுமொழி. நமக்கு தெரிந்த தொழிலைத் துவங்குவதைக் காட்டிலும். இன்றைக்கு எந்த தொழில் வெற்றி வாய்ப்பு நிறைந்தது என்பதை அறிந்து, சுய உதவிக் குழுக்கள் தொழில் செய்தால் கண்டிப்பாக சிறந்த தொழில் முனைவோராக வெற்றி பெறலாம். சிறந்த தொழில் முனைவோராவதற்கு பின்வரும் வழிகளைப் பின்பற்றினால் முன்மாதிரி சுய உதவிக் குழுவாக நாம் விளங்கலாம்.

1. நமது ஊரில் எந்த தொழில் செய்ய இயலும், தொழில் செய்வதற்கான வாய்ப்புகள் எவ்வாறு உள்ளன, சந்தை வாய்ப்பு என்ன என்பதை முதலில் ஆய்வு செய்து கொள்ள வேண்டும்.
2. தொழிலை தேர்வு செய்த பின்னர் தொழில் சார்ந்த விசயங் களில் நமக்கு என்ன தெரியும், அதற்கு எங்கு எவ்வாறு பயிற்சி பெறலாம் என்பதை சுய உதவிக் குழு கூட்டமைப்பு மற்றும் வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.
3. பயிற்சிகள் மற்றும் அத்தொழில் செய்பவர்களை நேரில் சந்தித்து, அவர்களது அனுபவ அறிவு ஆகியவை மூலம் தொழில் நுட்பங்களை முழுமையாக தெரிந்து கொள்ள வேண்டும்.
4. தொழிலுக்குத் தேவையான முதலீடுகள் எவ்வளவு தேவைப்படும்? எங்கிருந்து பெறலாம்? என்பதை முடிவு செய்து, தொழில் திட்ட அறிக்கை ஊரக வாழ்வாதார இயக்க களப்பணியாளர்கள் வழிகாட்டுதலுடன் தயார் செய்து நிதி திரட்டிக் கொள்ள வேண்டும்.
5. தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிலை துவங்கி திறம்பட நிர்வகிக்க வேண்டும்.
6. நமது உற்பத்திப் பொருளுக்கு எங்கெல்லாம் சந்தை வாய்ப்பு உள்ளதோ, அங்கெல்லாம் விற்பனை செய்வதை உறுதி செய்ய வேண்டும்.
7. போட்டியாளர்கள் பொருட்களுடன் ஒப்பீடு செய்து அதை விட தரமான முறையில் குறைவான விலையில் விற்பனை செய்ய வழிவகை செய்ய வேண்டும்.
8. கண்கவர் வகையில் எளிமையாகக் கையாளும் விதமாக பேக்கிங் செய்ய வேண்டும்.
9. கூட்டமைப்பு உறுப்பினர்கள் அனைவரும் நமது பொருளை வாங்கி பயன் பெறுவதை உறுதி செய்ய வேண்டும்.
10. வாழ்வாதார இயக்கம் மூலம் நடத்தப்படும் கண்காட்சிகளில் கலந்து கொண்டு விற்பனை செய்வதோடு பெரும் அளவில் கொள்முதல் உத்தரவுகள் பெற வேண்டும்.
11. மாவட்ட வாணிக வளாகங்களில் நமது பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.
12. முறையாகப் பதிவேடுகள் பராமரிக்க வேண்டும்.
13. முதலீட்டிற்காகப் பெறப்பட்ட கடனை முறையாக திருப்பி செலுத்த வேண்டும். இலாபத்தினை முறையாக பயன்படுத்த வேண்டும். ■

வி. எம். சிவக்குமார்,
உதவித் திட்ட அலுவலர், தூத்துக்குடி

சணல் பொருட்கள் தயாரிப்பில் சாதனை படைக்கும் மகளிர்!

ஓர் பார்வை

மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலின்படி இன்று சுய உதவிக் குழுப் பெண்கள் தொழில் முனைவோர்களாக அனைத்து தொழில்களிலும் தங்களின் முத்திரையைப் பதித்து வருகின்றனர். சுற்றுச் சூழலுக்கு உகந்த சணல் பொருட்கள் தயாரிப்பதிலும் இன்று சுய உதவிக் குழு மகளிர் ஈடுபட்டு வருகின்றனர். அத்தகைய குழுக்களில் ஒன்று தான் சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஒன்றியம், கீழமேல்குடி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ள வெற்றி சணல் பொருட்கள் தயாரிக்கும் குழு.

வெற்றி சுய உதவிக் குழுவின் செயலாளர் திருமதி. சத்யா, தங்கள் குழுவின் வெற்றி பற்றி கூறும்போது, 'கீழமேல்குடி ஊராட்சி கூட்டமைப்பைச் சேர்ந்த குழுக்களின் உறுப்பினர்களுக்கு மகளிர் திட்டம் மூலம் சணல் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் 10 குழுக்களைச் சேர்ந்த 20 உறுப்பினர்கள் பயிற்சி பெற்றனர். பயிற்சிக்குப் பின்னர் 20 நபர்களையும் இணைத்து மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலின்படி 'வெற்றி சணல் பொருட்கள் தயாரிக்கும் குழு' துவக்கப்பட்டது.

சணல் பொருட்கள் தயாரிப்பு தொழிலை மேற்கொள்ளத் தேவையான முதலீட்டு நிதிக்கு, சிவகங்கை மாவட்ட மகளிர் திட்டத்தை அணுகினோம். மகளிர் திட்டத் தின் முயற்சியால் மானாமதுரை பாரத ஸ்டேட் வங்கி கிளையில், நேரடி கடனாக ரூ. 3.50 இலட்சம் கிடைத்தது. அந்தத் தொகையை மூலதனமாகக் கொண்டு சணல் பொருட்கள் தயாரிக்கத் தேவையான இயந்திரங்கள் மற்றும் மூலப் பொருட்களை வாங்கினோம். கீழமேல்குடியில் உள்ள சமுதாயக் கூடத்தில் நாங்கள் 20 பேரும் சேர்ந்து சணல் பொருட்களை தயாரித்து, விற்பனை செய்யத் தொடங்கினோம்.

நாங்கள் தயாரிக்கும் சணல் பொருட்கள் தரமாகவும், அழகாகவும், நியாய மான விலையிலும் இருப்பதால் எங்களின் சணல் தயாரிப்புப் பொருட்களை அனைவரும் விரும்பி வாங்குகின்றனர். மானாமதுரைப் பகுதியில் உள்ள கடைகளில் எங்களின் பொருட்கள் அதிக அளவில் விற்பனை செய்யப்படுவதால் எங்களுக்கு கணிசமான அளவில் வருவாயும் கிடைக்கிறது. இதன் காரணமாக எங்கள் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் ஊக்கத்துடன் சணல் பொருட்கள் தயாரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் சிறப்பான முறையில் பல்வேறு சணல் பொருட்களையும் உற்பத்தி செய்ய முயற்சிகள் எடுத்து வருகிறோம். ■

வெற்றி சணல் பொருட்கள் தயாரிக்கும் குழு
கீழமேல்குடி ஊராட்சி கூட்டமைப்பு,
மானாமதுரை, சிவகங்கை மாவட்டம்.

நம் மாவட்டம்

பெரம்பலூர்

இளைஞர்களுக்கு ஓட்டுநர் உரிமம்

பெரம்பலூர் மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மூலம் தெரிவு செய்யப்பட்ட இளைஞர்களுக்கு ஓட்டுநர் பயிற்சியும், மகளிருக்கு தையல் பயிற்சியும் வழங்கப்பட்டது. பயிற்சிகளை முடித்தவர்களுக்கு ஓட்டுநர் உரிமமும், சான்றிதழும் 03.03.2014 அன்று மாவட்ட ஆட்சியர் டாக்டர் தரேஸ் அஹமது, இ.ஆ.ப., அவர்களால் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க பெரம்பலூர் மாவட்ட இயக்குநர் (பொ) திரு. அ. அய்யம்பெருமாள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நீலகிரி

முழு நிதி உள்ளாக்கம் குறித்த கருத்தரங்கு

நீலகிரி மாவட்ட மகளிர் திட்டம் மற்றும் முன்னோடி வங்கியான கனரா வங்கி இணைந்து நடத்திய முழு நிதி உள்ளாக்கம் குறித்து ஒருநாள் கருத்தரங்கு 20.02.2014 அன்று கோத்தகிரியில் நடைபெற்றது மாவட்ட ஆட்சியர் டாக்டர் பி. சங்கர், இ.ஆ.ப., அவர்கள் இக்கருத்தரங்கினை துவக்கி வைத்து, வங்கி சேவையின் அவசியத்தைப் பற்றி சிறப்புரையாற்றினார். முன்னோடி வங்கி மேலாளர், RSE-TI இயக்குனர்கள், FLCC ஆலோசகர்கள், மகளிர் திட்ட அலுவலர், IOB முன்னாள் பொது மேலாளர் ஆகியோர் முழு நிதி உள்ளாக்கம் குறித்து விவரமாக எடுத்துக் கூறினர்.

தேனி

புத்தகப் பராமரிப்புப் பயிற்சி

தேனி மாவட்டம் உத்தமபாளையம் மற்றும் பெரியகுளம் ஆகிய வட்டாரங்களில் உள்ள 30 ஊராட்சிகளில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இவ்வியக்கத்தின் முதற்கட்ட செயல்பாடுகளான மக்கள் நிலை ஆய்வு மூலம் இலக்கு மக்கள் கண்டறியப்பட்டு, அம்மக்களுக்கான கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் நிர்வாகிகள் மற்றும் கணக்காளர்களுக்கு கணக்குப் புத்தகப் பராமரிப்பு பயிற்சி சமீபத்தில் தேனி மாவட்ட மக்கள் கற்றல் மையத்தில் (மகமை) நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் தேனி மாவட்ட இயக்குநர் திருமதி. ஜா. உஷாதேவி கலந்து கொண்டு, கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தினை சிறப்பாக செயல்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்கினார். உதவித் திட்ட அலுவலர்கள் பயிற்சியினை அளித்தனர்.

திருச்சிராப்பள்ளி

கீரை பயிரிடும் குழுக்கள்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த முள்ளிக் கரும்பூர் ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பில் உறுப்பினராக செயல்பட்டு வரும் சத்தியம் மற்றும் கானக்குயில் ஆகிய சுய உதவிக் குழுவினர் கூட்டமைப்பில் கடன் பெற்று, முல்லை நகர் பகுதியில் கீரை பயிரிடுதல் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். தாங்கள் விளைவிக்கும் கீரைகளை உள்ளூர் சந்தைகளில் விற்பனை செய்வதன் மூலம் மாதந்தோறும் கணிசமான வருவாய் பெற்று வருகின்றனர். இதுதவிர மேலும் 5 சுய உதவிக் குழுக்கள் ஆடு வளர்த்தல், மளிகைக் கடை நடத்துதல், கீற்று முடைதல் மற்றும் காய்கறி வியாபாரம் செய்தல் ஆகியவற்றில் ஈடுபட்டு வருகின்றனர்.

சென்னை

கல்லூரிச் சந்தை

சென்னை மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகின் மூலம் 2013–14ஆம் ஆண்டு 10 கல்லூரி சந்தைகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. அதன் ஒரு பகுதியாக சென்னை, நுங்கம்பாக்கத்திலுள்ள எம்.ஓ.பி. வைஷ்ணவ் மகளிர் கல்லூரியில் கல்லூரிச் சந்தை நடைபெற்றது. இதில் சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 31 மகளிர் சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்டு தங்களின் உற்பத்திப் பொருட்களான அழகு நிறைந்த செயற்கை ஆபரணங்கள், சணல் பொருட்கள், பட்டு கைத்தறியில் தயாரித்த ஆயத்த ஆடைகள், கலைவண்ணம் நிறைந்த கைவினைப் பொருட்கள், சுவையான திண்பண்டங்கள், தோல் மற்றும் சணலால் தயாரிக்கப்பட்ட கைப்பைகள் மற்றும் பொம்மைகள் ஆகியவற்றை ரூ. 1,69 இலட்சத்திற்கு விற்பனை செய்தனர்.

நீலகிரி

கல்லூரிச் சந்தை

கல்லூரி மாணவ / மாணவியரிடையே மகளிர் சுய உதவிக் குழுக்கயின் உற்பத்தி பொருட்களை பிரபலப்படுத்தும் நோக்கத்துடன் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கல்லூரிகளிலும் கல்லூரிச் சந்தைகள் நடத்தப்படுகின்றன. நீலகிரி மாவட்ட மகளிர் திட்டத்தின் சார்பில் கேத்தியில் உள்ள சி.எஸ்.ஐ. பொறியியல் கல்லூரியில் 24.03.2014 முதல் 26.03.2014 வரையிலும், ஜே.எஸ்.எஸ். மருந்தியல் கல்லூரியில் 27.03.2014 முதல் 29.03.2014 வரையிலும் நடைபெற்ற கல்லூரி சந்தைகளில் நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த 11 குழுக்களும், பிற மாவட்டங்களைச் சேர்ந்த 10 குழுக்களும் கலந்து கொண்டு தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தனர்.

அரியலூர்

இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் 26.02.2014 அன்று அரியலூர் மாவட்ட ஆட்சியரக மக்கள் குறை தீர்க்கும் வளாகத்தில் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் திரு எ. சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இம்முகாமில் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளைச் சேர்ந்த 945 இளைஞர்கள் கலந்து கொண்டு வேலைவாய்ப்பிற்கு விண்ணப்பித்தனர். 12 முன்னணி நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்கள் நிறுவனங்களுக்குத் தேவையான இளைஞர்களை தேர்வு செய்தன. இம்முகாமில் மகளிர் திட்ட இயக்குநர் திரு எஸ். சாமுவேல் இன்பத்துரை மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை

நிறுவன கட்டமைப்பு பயிற்சி

அனைத்து மாவட்ட மகளிர் திட்ட அலுவலர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்களுக்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் குறித்த நிறுவன கட்டமைப்பு பயிற்சி சென்னை வேப்பேரி பெரியமேடு சால்வென்ஷன் ஆர்மி பயிற்சி மையத்தில் 05.03.2014 முதல் 21.03.2014 வரை 16 நாட்கள் நடைபெற்றது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர் (திறன் மேம்பாடு) திருமதி எம். மாதவி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சியில் பல்வேறு தலைப்புகளில் சிறப்பு வல்லுனர்களைக் கொண்டு சிறந்த முறையில் பயிற்சிகள் வழங்கப்பட்டது.

நிறுவன கட்டமைப்பு பயிற்சியில் அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளின் திட்ட அலுவலர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டு நிறுவன கட்டமைப்பு குறித்து பல்வேறு பயிற்சிகளைப் பெற்றனர்.

சென்ற இதழில் இடம் பெற்றிருந்த பல்வேறு சேமிப்புக் கணக்குகளின் விபரங்கள் இந்த இதழில் தொடர்கின்றன.

சிறிய அடிப்படை கணக்கு (Basic Savings Bank Deposit Account)

ஏழை எளியவர்கள், குறிப்பாக கிராமப்புற மக்களுக்கான சேமிப்பு கணக்கு

சாதாரண மற்றும் அடிப்படை சேமிப்பு கணக்கு துவக்க தேவைப்படும் ஆவணங்கள், அந்தக் கணக்கைப் பற்றிய முக்கிய விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

விபரம்	சாதாரண சேமிப்பு கணக்கு (Ordinary Savings Bank Account)	சாதாரண சேமிப்பு கணக்கு (Basic Savings Bank Deposit Account)
குறைந்தபட்ச தொகை	கிராமப்புற வங்கி ரூ. 100/- (காசோலை இல்லாமல்) ரூ. 500/- (காசோலையுடன்) நகர்ப்புற வங்கிகள் ரூ. 500/- (காசோலை இல்லாமல்) ரூ. 1000/- (காசோலையுடன்)	ரூ. 5/- (காசோலை வசதி கிடையாது)
இருப்பு தொகை	குறிப்பிட்ட வரம்பு இல்லை	அதிகபட்சமாக ரூ. 50,000/- வரை வைத்துக் கொள்ளலாம். மொத்த வரவு (Credit) ஒரு வருடத்திற்கு ரூபாய் ஒரு இலட்சம் வரை அனுமதிக்கப்படும்.
பிற வசதிகள்	உண்டு	இல்லை
ATM/Debit Card ஏ.டி.எம். கார்டு	உண்டு	இல்லை
கணினி வங்கி சேவை (Internet Banking)	ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேல் எப்பொழுதும் கணக்கில் வைத்திருந்தால் (உதா: ரூ. 25,000/-) சேவை சலுகைகள் வழங்கப்படும்.	உண்டு
	வரைவு காசோலை / காசோலை (DD / Cheque)	மொத்த பணவிடை (Withdrawals Cash / Transfer) ஒரு மாதத்திற்கு ரூ. 10,000/- வரைதான் அனுமதிக்கப்படும். அனுமதி இல்லை
	மொத்த பணவிடைக்கு அளவு கிடையாது (Unlimited withdrawal)	
	வெளிநாட்டிலிருந்து வரும் பணத்தை வரவு வைத்துக் கொள்ளலாம். கால வரம்பு கிடையாது	வரவு செலவு செய்ய ஒரு வருடம் அனுமதி உண்டு. அதற்குள் உரிய ஆவணங்கள் கொடுத்து, சாதாரண சேமிப்பு கணக்காக மாற்றிக் கொள்ள வேண்டும். அல்லது ஆதாரங்கள் பெற, அதிகாரபூர்வமாக விண்ணப்பித்த மனுக்களை சமர்ப்பித்தால் மேலும் ஓர் ஆண்டிற்கு வரவு செலவு செய்ய அனுமதி வழங்கப்படும்.

நடப்பு கணக்கு (Current Account), வைப்பு தொகைகள் (Fixed Deposit) போன்ற திட்டங்கள் குறித்த பல்வேறு விவரங்களை இனிவரும் இதழ்களில் காணலாம். ■

(தொடரும்)

வாழ்வாதாரத்தை வளமாக்கும் வங்கி சேவைகள்...!

கே. எம். திருநாவுக்கரசு,
முதுநிலை ஆலோசகர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

சிறு தொழில்கள் மற்றும் குறைந்த வருமானம் உள்ள குடும்பத்தினருக்கான முழுமையான நிதி சேவை

Dr. நசிகெட் மோர் குழு அறிக்கை

மத்திய ரிசர்வ் வங்கி (RBI), 2013ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம், சிறு தொழில்கள் (Small Business) மற்றும் குறைந்த வருமானமுள்ள குடும்பங்களுக்கும் (Low Income Households) நிதி உட்படுத்துதல் (Financial Inclusion) மற்றும் நிதி சேவைகள் மிகுதியாக (Deepening) கிடைத்திட, தொலைநோக்கு பார்வையுடன், விரிவாக ஆய்வுகள் செய்து, இடர்பாடுகள் இல்லாத ஒரு அறிக்கையை சமர்ப்பிக்க Dr. நசிகெட் மோர் தலைமையில் ஒரு குழுவை நியமித்தது. அதன் அறிக்கையை, மத்திய ரிசர்வ் வங்கி, அதிகாரபூர்வமாக சமீபத்தில் வெளியிட்டது. அதன் முக்கிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

நமது நாட்டில் முழுமையான நிதி உட்படுத்துதல் மற்றும் நிதி சேவைகள் மிகுந்து கிடைத்திட, தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய 6 அறிக்கைகளை சமர்ப்பித்தது. அவை :

உலகளாவிய மின் பொருள் வங்கி கணக்கு (Universal Electronic Bank Account - UEBA)

18 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு இந்தியாவாழ் குடிமகனுக்கும், முழுமையான, பாதுகாப்பான மின் பொருள் வசதி கொண்ட வங்கிக் கணக்கு இருக்க வேண்டும்.

நியாயமான கட்டணத்தில், சேமிப்பு கணக்குகள் வைத்திட மற்றும் பணம் வழங்கல் வசதிகள் எங்கும் நிறைந்து காணப்பட வேண்டும்

இந்தியாவில் வசிக்கின்ற ஒவ்வொருவருக்கும், 15 நிமிட நடைபயண தூரத்தில், மேற்கூறிய பணத்தை வங்கிக் கணக்கில் செலுத்தவும், பணம் பெறவும் வசதி இருக்க வேண்டும்.

முறையான, கட்டுப்படி ஆகக்கூடிய வட்டியில் கடன்கள் பெற போதுமான வழிமுறைகள் (Sufficient access to Affordable Formal Credit)

ஒவ்வொரு குறைந்த வருமானமுள்ள குடும்பம் மற்றும் சிறு தொழில் புரிபவர்களுக்கு, அவர்களுக்குத் தேவையான கடனுதவிகளை அறிந்து கொள்ளும் திறமையான, ஒழுங்குமுறையுடன் கூடிய கடன் கொடுப்பவர் (Lender) இருக்க வேண்டும். அம்மாதிரியான கடன் கொடுப்பவர், முழுமையான, அதிக அளவில், மேற் கூறியவர்களுக்கு பொருத்தமான கடன் திட்டங்கள், கட்டுபடியாகக் கூடிய வட்டியில் கொடுப்பவராக இருக்க வேண்டும்.

உலகளாவிய அணுகுமுறையுடன் கூடிய சேமிப்பு மற்றும் முதலீட்டுத் திட்டங்கள், நியாயமான கட்டணத்தில் கிடைக்க வேண்டும்

ஒவ்வொரு குறைந்த வருவாய் உள்ள குடும்பங்கள் மற்றும் சிறு தொழில் புரிபவர்கள், தகுதியான பொருத்தமான முதலீடு மற்றும் சேமிப்பு திட்டங்களை, நியாயமான செலவில் வழங்கக் கூடியவர்களை அணுக வசதிகள் இருக்க வேண்டும்.

காப்பீடுகள் (Insurance) மற்றும் இடர்பாடுகள் நிர்வகிக்கும் திறன் (Risk Management) / பொருட்கள், உலகளாவிய அணுகுமுறையுடன், நியாயமான கட்டணத்தில் அளிக்கக் கூடியவர்களை அணுக வசதிகள் இருக்க வேண்டும்.

மேற்கூறியவைகள் பொருட்கள், கீழ்கண்டவற்றால் ஏற்படும் இடர்பாடுகளை குறைந்த செலவில் நிர்வகிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். பயனுள்ள வர்த்தக பொருட்களின் விலை மாற்றங்கள் (Commodity Price Movements), மனித இனத்தின் நீண்ட நாள் வாழ்க்கை, இயலாமை, மரணம், கால்நடைகளின் மரணம், மழை, சொத்துக்களின் சேதம்.

தகுதியானவற்றை பெறும் உரிமை (Right to Suitablity)

ஒவ்வொரு குறைந்தபட்ச வருமானமுள்ள குடும்பங்களுக்கும், சிறு தொழில் புரிபவர்களும் சட்டபூர்வமாக, பாதுகாக்கப்பட்ட உரிமைகளை, நிதி சேவை நிறுவனங்கள் வழங்க வேண்டும். மொத்த கவன குறைவினாலும் மற்றும் தக்க சட்ட வழிமுறைப்படி தகுதியை அறியும் முறை பின்பற்றப்படவில்லை என அறிந்தால், அவர்களுக்கு சட்டரீதியான குறை தீர்வு (Legal Redress) காணும் உரிமை இருக்க வேண்டும்.

கீழ்கண்ட வரையறுக்கப்பட்ட நான்கு கொள்கைகள், மேற்கூறிய தொலைநோக்கு அறிக்கைகளை, விதிமுறைகள் மற்றும் நிறுவன அமைப்புகள் நிறுவன அமைப்புகள் வெற்றியுடன் செய்து முடிக்க வழிகாட்டியாக இருக்கும்.

நிலைப்புத் தன்மை (Stability), மறைப்பின்மை / தெளிந்த தன்மை (Transparancy), நடுநிலைமை (Neutrality) பொறுப்பு (Respancibility)

நிதி உள்ளடக்கம் (Financial Inclution) மற்றும் நிதி ஆழ்படுத்தலும் (Financial Deepening) வெற்றியுடன் நிறைவேற்றும் எந்த ஒரு அணுகுமுறையும் எல்லாவற்றிலும் முறையான, நிலையான செயல் விளைவுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு செய்யப்பட வேண்டும், மற்றும் நிலையான செயல்முறையை எந்தவித சமரசத்திற்கும் (Compromise) விட்டுக் கொடுக்கக் கூடாது. ■

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

IFAD
Enabling poor rural people to overcome poverty

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

திரு. **விக்ரம் கபூர்,** இ.ஆ.ப.,
முதன்மைச் செயலாளர் /
திட்ட இயக்குநர்

திரு. A. R. கிளாட்ஸ்டன் புஷ்பராஜ்,
கூடுதல் இயக்குநர்

திரு. இரா. இரவிச்சந்திரன்,
தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதிய உயர் அலுவலர் வருகை

ஐந்தாவது கூட்டு ஆய்வுக் குழுவினர் கடந்த ஜுலை 2013ல் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்தவாழ்வாதாரத்திட்டப்பகுதிகளில்ஆய்வுமேற்கொண்டுதிட்டப்பணிகளின் தரம் குறித்து பாராட்டினர். இது தொடர்பான அறிக்கையும் அளித்துள்ளனர். அதன் தொடர்ச்சியாக பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் தலைவர் திரு. கனாயோ நிவான்ஸி அவர்கள் இத்திட்டத்தை பார்வையிட வரும் ஆகஸ்ட் மாதம் தமிழகத்திற்கு வருகை புரிய உள்ளதன் அடிப்படையில் அதற்கான முன் ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்பது குறித்தும், அவ்வாண்டு திட்ட செயல்பாடுகள் குறித்தும் கலந்தாய்வு செய்திட கடந்த 14.03.2014 அன்று பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதி யத்தின் உயர் அலுவலர் திரு. நைஜல்பிரட் அவர்கள் மற்றும் திருமதி. மீரா மிஸ்ரா, புதுடெல்லி ஆகியோர் திட்ட இயக்குநர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் இதர அலுவலர்களுடன் கலந்தாய்வு செய்தனர்.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி திரு. கனாயோ நிவான்ஸி அவர்கள் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள மீன் விற்பனை சங்கத்தின் செயல்பாடுகளைப் பார்வையிடவும், பிற திட்டப் பணிகளை பார்வையிடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ■

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் தலைவர் திரு. கனாயோ நிவான்ஸி அவர்கள் இத்திட்டத்தை பார்வையிட வரும் ஆகஸ்ட் மாதம் தமிழகத்திற்கு வருகை புரிய உள்ளார்.

பள்ளி மாணவர்களுக்கு கையேடு வழங்குதல்

அனைத்து மாணவ – மாணவியரும் இத்தப் புத்தகத்தை ஆர்வமுடன் வாங்கிப் படித்தனர். இந்த புத்தகம் தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது என்று அனைத்து மாணவர்களும் தெரிவித்துள்ளனர்.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்ட செயலாக்கத்தில் இடர் மேலாண்மை ஒரு முக்கிய கூறாக உள்ளது. அதன் அடிப்படையில், சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டப் பகுதிகளில் உள்ள பள்ளிகளில் பயிலும் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையிலான மாணவ – மாணவியர்களுக்கு நிதி நிர்வாகத்தில் எப்படி வெற்றி பெறுவது மற்றும் இயற்கை இடர்பாடுகளிலிருந்து எவ்வாறு தங்களை காத்துக் கொள்வது என்பது தொடர்பான புத்தகங்கள் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் சார்பில் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

இப்புத்தகங்களில் பல்வேறு மதிப்பிலான நாணயங்கள் மற்றும் ரூபாய் நோட்டுக்களின் தன்மை, அவற்றின் பயன்பாடு, இயற்கை பேரிடர்களால் ஏற்படும் பாதிப்புகள், அதிலிருந்து தப்பிக்கும் வழிமுறைகள், சேமிப்பின் முக்கியத்துவம், இளம் வயதிலேயே சேமிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தும் வழி முறைகள், வங்கிகளின் முக்கியத்துவம் மற்றும் வங்கிகளின் செயல்பாடு, வங்கியில் வாடிக்கையாளராக சேரும் முறை, வங்கிக் கணக்கு வகைகள் போன்ற அடிப்படை விவரங்களை அறிந்து கொள்ளும் வகையில் பல்வேறு பயனுள்ள விபரங்கள் இடம் பெற்றிருக்கின்றன.

இந்த புத்தகங்களில் உள்ள பாடங்கள், எளிய தமிழ் நடையிலும், எளிதில் புரிந்து கொள்வதற்காக உரிய படங்களுடன் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. இந்தப் புத்தகத்தை அனைத்து மாணவ – மாணவியரும் ஆர்வமுடன் வாங்கிப் படித்தனர். தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாகவும் இப்புத்தகம் இருக்கின்றது என்று அனைத்து மாணவர்களும் தெரிவித்துள்ளனர். ■

சிப்பிகள் மூலம் வாழ்வாதாரம்

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் நுண்தொழில் மேம்பாட்டின் மூலம் பயனடைந்த திருமதி. பாலசுந்தரி, திருமதி. கல்யாணி மற்றும் திரு. கோபி ஆகியோர் தங்களின் அனுபவத்தை பகிர்ந்து கொள்கின்றனர்.

என் பெயர் பாலசுந்தரி, நான் கடலூர் மாவட்டம் சுத்துக்குளம் கிராமத்தில் வசித்து வருகிறேன். சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் கடல் சிப்பிகளைக் கொண்டு கைவினை மற்றும் அலங்காரப் பொருட்களை செய்யும் குறுந்தொழில்களுக்கு ரூபாய் 2,50,000/–மும், எங்களுடைய பங்களிப்பாக ரூபாய் 25,000/– சேர்த்து மொத்தம் ரூபாய் 2,75,000/– கொண்டு இத்தொழிலை 26.10.2012 அன்று துவங்கி சிறப்பாக நடத்தி வருகிறோம். இதுநாள் வரை ரூபாய் 2,62,200/– அளவில் பொருட்கள் விற்பனை செய்துள்ளோம் என்று குறிப்பிட்டார்.

திருமதி கல்யாணி கூறும்போது, 'நாங்கள் தயார் செய்யும் சிப்பிப் பொருட்களை கடலூர் சில்வர் கடற்கரை, சிதம்பரம் மற்றும் பாண்டிச்சேரி பகுதிகளில் விற்பனை செய்து நல்ல இலாபம் ஈட்டி வருகிறோம். நாங்கள் தயாரிக்கும் பொருட்கள் தர மாகவும் கலைநயத்துடனும் இருப்பதால், சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வாங்கிச் செல்கின்றனர்' என்றார்.

கடலூர் முதுநகரில் பாபா கிப்ட் சென்டர் என்ற பெயரில் கடை நடத்தி வருகிறோம். இந்தக் கடையில் எங்களால் தயாரிக்கப்படும் சிப்பிப் பொருட்கள் நியாயமான விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

திரு கோபி கூறும்போது 'எங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்காக கடலூர் முதுநகரில் பாபா கிப்ட் சென்டர் என்ற பெயரில் கடை நடத்தி வருகிறோம். இந்தக் கடையில் எங்களால் தயாரிக்கப்படும் சிப்பிப் பொருட்கள் நியாயமான விலையில் விற்பனை செய்யப்படுகிறது. சிப்பிப் பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் எங்களுக்கு மாதந்தோறும் கணிசமான வருவாய் கிடைக்கிறது. மேலும், எங்கள் செலவினம் போக மீதமுள்ள இலாபத்தில் ரூபாய் 82,000/– வரை கடனை திருப்பி செலுத்தியுள்ளோம்' என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார்.

சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டத்தின் நுண்தொழில் மேம்பாட்டின் மூலம் இதுவரை ஏராளமான குறுந்தொழில்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவைகளின் மூலம் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்கள் மறுவாழ்வு பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. ■

ஆயத்த ஆடைகள் தயாரித்தல், இயற்கை நார் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த ஒரு புதிய முயற்சி

சுய உதவிக் குழுக்கள் மூலம் தயாரிப்பு குழுக்கள் (Prodcer Groups) அமைத்து பலவிதமான ஆடைகள் மற்றும் கைவினைப் பொருட்களை தயாரித்து, அவற்றை உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் சந்தைப்படுத்தி வரும் பெங்களூரில் உள்ள இண்டஸ்ட்ரீ அறக்கட்டளை நிறுவனத்தை சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் முதுநிலை ஊரக நிதி மேலாளர் திரு ஆர். லட்சுமிநாராயணன், நிறுவன வளர்ச்சி மேலாளர் திரு. சி. கனிங்ஸ்டன் மற்றும் மாவட்ட செயலாக்க அலுவலர்கள் அடங்கிய குழு கடந்த 19.03.2014 அன்று நேரில் சென்று பார்வையிட்டது.

இண்டஸ்ட்ரீ அறக்கட்டளை, கிராமப்புற சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு தையல், நெசவு, இயற்கை நார், பின்னல் ஆகிய துறைகளில் பயிற்சி அளித்து, அவர்களை அத்தொழிலில் ஈடுபடச் செய்து, அவர்கள் தயாரிக்கும் பொருட்களை உள்நாடு மற்றும் வெளிநாடுகளுக்கு புதுமையான பிராண்டுகளில் சந்தைப்படுத்தி வருகின்றனர்.

'ஏக்தா' என்பது ஆயத்த ஆடைகளையும், 'கிரீன் கிராப்ட்' இயற்கை நாரில் செய்யப்பட்ட கைவினைப் பொருட்களையும் குறிப்பது ஆகும். இவர்களுக்கு நிலையான சந்தை வாய்ப்பு உள்ளமையால் இந் நிறுவனத்துடன் இணைந்து சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் பயனாளிகளுக்கும் புதிய சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது. ■

இண்டஸ்ட்ரீ அறக்கட்டளை, கிராமப்புற சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு தையல், நெசவு, இயற்கை நார், பின்னல் ஆகிய துறைகளில் பயிற்சி அளித்து, அவர்களை அத்தொழிலில் ஈடுபடச் செய்து, அவர்கள் தயாரிக்கும் பொருட்களை உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் சந்தைப்படுத்தி வருகின்றனர்.

காப்பீட்டால் கிடைத்த வாழ்வு...

எனது தன்னம்பிக்கைக்கு காரணமாக இருந்த இத்திட்டத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்து மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களும் காப்பீட்டுத் திட்டத்தில் இணைந்து பயன் பெற வேண்டும் என்பது என் விருப்பமாகும்.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டப் பகுதியில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு காப்பீடு தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதால் சுமார் 1,89,298 பேர் பல்வேறு காப்பீட்டுத் திட்டங்களில் இணைந்துள்ளனர்.

அவர்களில் ஒருவரான திருமதி. எ. பழனியம்மாள் கூறுகையில்,

என் பெயர் பழனியம்மாள், என் கணவர் பெயர் ஆறுமுகம். நான் கடலூர் மாவட்டம், குண்டு உப்பலவாடி

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ளேன். சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் கடந்த 2012ஆம் ஆண்டு எங்கள் தீபம் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு காப்பீடு கல்வி பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் நான் பெற்ற விழிப்புணர்வின் காரணமாக கொத்தனார் தொழில் செய்து வந்த என் கணவரை சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்ட உதவியுடன் எல்.ஐ.சி. ஜீவன் மங்கள் காப்பீட்டில் உறுப்பினராக 2013ல் இணைத்தேன்.

04.01.2014 அன்று எதிர்பாராத விதமாக என் கணவர் மரணம் அடைந்தார். என் கணவரை இழந்து நானும், எனது பிள்ளைகளும் மிகவும் கஷ்டப்பட்டோம். குடும்பத்தை நடத்த முடியாமல் வறுமையில் வாடினோம். மேற்கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் துயரத்தில் இருந்தோம். இந்நிலையில் நாங்கள் ஏற்கனவே காப்பீடு செய்து இருந்த எல்.ஐ.சி. ஜீவன் மங்கள் காப்பீடு மூலம் எங்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ. 10,000/– உடனடியாக எனக்கு சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் (PTSLP) மூலம் கிடைத்தது. அந்தத் தொகையின் மூலம் ஏதாவது ஒரு சிறு தொழில் செய்து என் குடும்பத்தைக் காப்பாற்ற முடியும் என்ற தன்னம்பிக்கை எனக்கு ஏற்பட்டுள்ளது.

எனக்கு இந்த தன்னம்பிக்கை ஏற்படக் காரணமாக இருந்த சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு எனது நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்து மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களும் காப்பீட்டுத் திட்டத்தில் இணைந்து பயன் பெற வேண்டும் என்பது என் விருப்பமாகும். ■

நுண்தொழில் மேம்பாடு

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிலைத்த வாழ்வாதாரத்தை அளிக்கும் நோக்கத்துடன் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் பல நுண் தொழில்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகின்றன. 186 நுண்தொழில்கள் ரூ. 562.58 இலட்சம் மதிப்பீட்டில் வெற்றிகராமாக செயல்பட்டு வருகின்றன.

(ரூபாய் இலட்சத்தில்)

வ.எண்.	மாவட்ட வாரியான நுண்தொழில்களின் எண்ணிக்கை	பயனாளிகளின் எண்ணிக்கை	திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட கடன் தொகை	இதுவரை திரும்ப செலுத்தப்பட்ட தொகை
1	திருவள்ளூர்	150	26.50	10.09
2	காஞ்சிபுரம்	153	62.24	15.24
3	விழுப்புரம்	87	35.63	10.78
4	கடலூர்	307	92.56	20.14
5	நாகப்பட்டினம்	424	125.17	36.81
6	கன்னியாகுமரி	363	113.02	28.03
	மொத்தம்	1484	455.12	121.09

இக்குறுந்தொழில்களுக்கான திட்டம் மூலம் வழங்கப்பட்ட தொகை ரூபாய் 455.12 இலட்சம், திட்டப் பகுதிகளில் உள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் (PLFs) மூலம் கடனாக வழங்கப்பட்டுள்ளன. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், நுண்தொழில் முனைவோரிடம் வசூலித்து, தம் பொதுக்கணக்கில் சேர்த்துக் கொள்ளும். இத்தொகையில் 25% துயர் குறைப்பு நிதியாகவும், 75% பிற குறுந்தொழில்களுக்கு நிதியுதவி செய்யவும் பயன்படுத்தப்படும். ■

துயர் குறைப்பு நிதி

துயர் குறைப்பு நிதி மூலம் பயனடைந்த திருமதி வசந்தா தன் அனுபவங்களை பகிர்ந்து கொள்கிறார்.

என் பெயர் வசந்தா, நான் கடலூர் மாவட்டம், திருச்சோபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் காயல்பட்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் பொருளாதாரக் கடன் பெற்று, அதனைக் கொண்டு கறவை மாடு ஒன்றினை வாங்கி, அதன் மூலம் வருவாய் ஈட்டி வந்தேன். கறவை மாட்டிற்கு காப்பீடும் செய்திருந்தேன்.

எதிர்பாராத விதமாக எனது கறவை மாடு திடீரென்று இறந்து விட்டது. இதனால் மிகுந்த துயரமான நிலையில் இருந்த நான், வங்கியிலிருந்து பெற்று பொருளாதாரக் கடனை திரும்ப செலுத்த முடியாமல் போனதுடன், என் குடும்பத்தை நடத்தவும் மிகவும் சிரமப்பட்டேன்.

கடன் தவணை கட்டாததால் வங்கி செயலாளர் நேரடியாக வீட்டிற்கு வந்து கடனை பற்றி கேட்டார். அவரிடம் கறவை மாடு இறந்த செய்தியினைக் கூறி, மாட்டிற்காக செய்திருந்த காப்பீடு தொகையினை பெற்றுத் தரும்படி கேட்டேன். ஆனால் அவர், கடன் தொகையை திரும்பச் செலுத்தும் பட்சத்தில் தான் கறவை மாடு இறந்ததற்கான காப்பீட்டுத் தொகையை பெற்றுத் தர முடியும் எனக் கூறினார்.

கடன் தொகையை திரும்பச் செலுத்த என்ன செய்வது என்று தெரியாமல் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளான நிலையில் எனக்கு திருச்சோபுரம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிலிருந்து 'துயர் குறைப்பு நிதி' மூலமாக ரூ. 5000/– மென்கடனாகக் கிடைத்தது. இந்தத் தொகையினை வங்கியில் செலுத்திய பின்தான் காப்பீடு சம்பந்தமான வேலைகளை செய்து முடித்து, காப்பீட்டுத் தொகையினைப் பெற முடிந்தது.

காப்பீட்டு தொகையைப் பெறுவதற்கு துயர் குறைப்பு நிதி எனக்குப் பேருதவியாக இருந்தது. அதுமட்டும் இல்லையேல் கந்து வட்டிக்கு பணம் வாங்கி வங்கியில் செலுத்த வேண்டியிருந்திருக்கும். இதற்காக அதிக அளவு வட்டி செலுத்தும் நிலை எனக்கு ஏற்பட்டிருக்கும். எனக்கு நிதியுதவி செய்த இத்திட்டத்திற்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். ■

முற்றக் கச்சேரி

சமூகத் தணிக்கை குழு

சுய உதவிக் குழுவினைச் சேர்ந்த சுபா, செல்லாயி, பார்வதி மற்றும் வாணி ஆகியோர் சமூகத் தணிக்கை குழு குறித்து விவாதிக்கிறார்கள்.

வேணி : இன்னைக்கு எதைப் பத்தி பேசப்போறோம்?

சுபா : சமூகத் தணிக்கைக் குழு குறித்து பேசப் போறோம்.

செல்லாயி : சமூகத் தணிக்கை குழு என்றால் என்ன?

சுபா: தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது மக்களால் செயல்படுத்தப்படும் ஒரு இயக்கம். இவ்வியக்கம் கோட்பாடுகளின்படி முறையாக செயல்படுகிறதா? ஏழை மக்களுக்கு இயக்கத்தின் பலன் சென்றடைகிறதா? என்பனவற்றை கண்காணிக்க அமைக்கப்படும் குழு ‘சமூகத் தணிக்கைக் குழு’ என்று சொல்லப்படுது.

செல்லாயி: இந்த குழுவில் யாரெல்லாம் உறுப்பினராக இருப்பார்கள்?

சுபா: சமூகத் தணிக்கை குழுவில் 5 முதல்7 நபர்கள் உறுப்பினராக இருப்பார்கள். 50% ஏழை மக்கள், 50% மகளிர் உறுப்பினராக இருப்பார்கள். மாற்றுத் திறனாளி பிரதிநிதி ஒருவரும், இளைஞர்களின் பிரதிநிதி ஒருவரும் உறுப்பினராக இருக்க வேண்டும். ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் கிராம வறுமை ஒழிப்பு சங்க உறுப்பினர்களின் நெருங்கிய உறவினர்களாக இருப்பவர்கள் இந்தக் குழுவில் இடம் பெற முடியாது.

செல்லாயி: இவர்களின் குண நலன்கள் எப்படி இருக்க வேண்டும்?

சுபா: சமூகத்தில் மதிக்கப்படுபவர்களாகவும், ஏழைகளின் நம்பிக்கைக்கு உரியவர்களாகவும் இருக்க வேண்டும். கடினமாக உழைப்பவராகவும், தணிக்கைக் குழுவின் வேலைகளை தன்னார்வமாக செய்யக் கூடியவராகவும் இருக்க வேண்டும். நியாயமாக செயல்படுபவராகவும், தன்னலம் கருதாமல் பொது நலம் கருதுபவராகவும் இருக்க வேண்டும்.

பார்வதி: இக்குழுவின் பொறுப்புகள் என்ன?

சுபா: அனைத்து சமூக அமைப்புகளும் இயக்க கோட்பாடுகளை தவறாமல் பின்பற்றுவதை உறுதி செய்தல். ஏழைகளின் முன்னுரிமை அடிப்படையில் பயனாளிகளை தேர்ந்தெடுப்பது, தொழில் திட்டங்களை தயாரித்து செயல்படுத்தல் போன்றவற்றை கண்காணிப்பது இக்குழுவின் பொறுப்புகள் ஆகும்.

வாணி: கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கு நிதி கிடைப்பதற்கு இந்தக் குழு எப்படி உதவும்?

சுபா: வாழ்வாதார இயக்க நிதியில், செலவு செய்யப்பட்டதற்கு சமூகத் தணிக்கை குழு சான்றளித்து கிராம சபையில் ஒப்புதல் பெற வேண்டும். சமூகத் தணிக்கை குழுவின் பயன்பாட்டுச் சான்றிதழ் பெறப்பட்ட பின்னரே, மாவட்ட இயக்க மேலாண்மை அலுவலகத்திலிருந்து கிராம வறுமை ஒழிப்பு சங்கத்திற்கு நிதி விடுவிக்கப்படும்.

வாணி: இந்தக் குழுவோட பதவிக் காலம் எவ்வளவு நாள்?

சுபா: ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பிரதிநிதி தங்களது பதவியில் உள்ள காலம் வரை கிராம வறுமை ஒழிப்பு சங்கத்திலும் பதவியைத் தொடரலாம். மற்ற உறுப்பினர்களின் பதவிக் காலம் இரண்டு ஆண்டுகளாகும்.

செல்லாயி: சமூகத் தணிக்கை குழு பற்றி விளக்கமாக சொன்னதற்கு ரொம்ப நன்றி.

(சுபா விடைபெற்று செல்ல... செல்லாயி, வாணி மற்றும் பார்வதி ஆகியோர் வீட்டிற்கு செல்கின்றனர்.) ■

(தொடரும்)

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

புது வாழ்வு திட்டம்

இளைஞர்களுக்கு வழங்கப்படும் தொழிற்பயிற்சிகள் குறித்த விபரங்கள் இந்த ரதத்தில் இடம் பெற்றிருந்தன. மேலும், அனைத்து பயிற்சிகள் குறித்த துண்டு பிரசுரங்களும் இவ்விழிப்புணர்வு ரதத்தில்...

பக்கம்...28

காஞ்சிபுரம் நகராட்சி 19வது வார்டு, பல்லவர் மேடு பகுதியில் செயல்படும் பல்லவர் மேடு நகர்ப்புற அளவிலான மகளிர் குழு கூட்டமைப்பில் 38 சுய உதவிக் குழுக்கள் 516 உறுப்பினர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

பக்கம்...30

மூலிகைகள் நம் உடல் நலத்தைக் காப்பதுடன், ஆரோக்கிய வாழ்விற்கும் வழிவகுக்கிறது. நோய் எதிர்ப்பு சக்தியும், மருத்துவ குணமும் நிறைந்த மூலிகைகள் காடுகள், மலைகள் போன்ற இடங்களில் இயற்கையாகவே வளர்ந்து உள்ளன.

பக்கம்...32

உடல் நலத்தைக் காக்கும் மூலிகைகள்

இளைஞர் வேலைவாய்ப்பு விழிப்புணர்வு ரதம்

சேலம் மாவட்டத்தில் ஏற்காடு மலைப்பகுதியில் உள்ள இளைஞர்களுக்கு தொழிற்திறன் பயிற்சி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, புதுவாழ்வு திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள விழிப்புணர்வு ரதத்தினை புதுவாழ்வு திட்ட கூடுதல் திட்ட இயக்குநர் திருமதி ஆர். வி. ஷஜீவனா அவர்கள், 14.03.2014 அன்று ஏற்காட்டில் கொடி அசைத்து துவக்கி வைத்தார். இந்த ரதத்தில் இளைஞர்களுக்கு வழங்கப்படும் தொழிற்பயிற்சிகள் குறித்த விபரங்கள் இடம் பெற்றிருந்தன. மேலும், அனைத்து பயிற்சிகள் குறித்த துண்டு பிரசுரங்களும் இவ்விழிப்புணர்வு ரதத்தில் விநியோகிக்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் மாநில வல்லுநர்கள் திரு பிரகாஷ், திரு கருப்பசாமி, மாவட்ட திட்ட மேலாளர்கள் திரு க. மூர்த்தி, திரு செவத்தான், உதவித் திட்ட மேலாளர் திரு கார்த்திக், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

உலக வங்கிக் குழுவினரின் கலந்துரையாடலின் போது, கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் செயல்பாடுகள், இலக்கு மக்களுக்கு வழங்கப்படும் முன்னுரிமைகள், இளைஞர்களுக்கு வழங்கப்படும் தொழிற்பயிற்சிகள், பெண்களுக்கான உரிமைகள் மற்றும் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு போன்றவை குறித்து கலந்துரையாடப்பட்டது.

உலக வங்கிக் குழுவினர் ஆய்வு

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியம், படப்பையில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை பார்வையிட உலக வங்கிக் குழுவினர் திருமதி. கீர்த்திகா, திருமதி கீதா அலெக்ஸ் மற்றும் மாநில வாழ்வாதார வல்லுநர் திரு சக்கரபாணி ஆகியோர் வருகை தந்தனர். படப்பை ஊராட்சியில் உள்ள கிராம வறுமை ஒழிப்பு சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, ஒத்த தொழில் குழுக்கள், சமூக வல்லுநர்கள் ஆகியோருடன் கலந்துரையாடினர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட திட்ட மேலாளர் திரு பி. தனசேகர் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

தேசிய ஊரக வாழ்வாதார இயக்க அலுவலர்கள் வருகை

ஜம்மு & காஷ்மீர் மாநில தேசிய ஊரக வாழ்வாதார இயக்க அதிகாரிகள் திருமதி Dr. யோகிதா ராணா, I.A.S., MORD GOI, திரு K. மாணிக்கராஜ், I.A.S., State Rep. J & K NRLM GOI, திரு சுப. இராசன்பாபு, தேசிய ஊரக வாழ்வாதார இயக்க மேலாளர், தேசிய ஊரக வாழ்வாதர இயக்கம், இந்திய ஊரக வளர்ச்சி அமைச்சகம், புதுடெல்லி மற்றும் திரு இராஜேஷ், உதவித் திட்ட மேலாளர், NRO, புதுவாழ்வு திட்ட மாநில அலுவலகம், சென்னை ஆகியோர் திருவண்ணாமலை மாவட்டத்திற்கு வருகை தந்து, புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளைப் பார்வையிட்டனர். இந்நிகழ்வின் போது புதுவாழ்வு திட்ட அலுவர்கள் உடனிரந்தன்

கிராமப் பகுதிகளில் வசிக்கும் ஏழை மக்களின் வாழ்வில் ஏழ்மையை விரட்டி பொருளாதார வளர்ச்சி கிடைத்திட புதுவாழ்வு திட்டம் வாயிலாக கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

வாழ வழிகாட்டும் புதுவாழ்வு

தருமபுரி மாவட்டம், பேடறஅள்ளி ஊராட்சி, பூச்செட்டி அள்ளி கிராமத்தில் வசிப்பவர் ஜெயா, இவரின் கணவர் இறந்து விட்டார். மிகவும் ஏழ்மை நிலையில் கூலி வேலைக்கு சென்று குறைவான வருவாய் பெற்று தனது மகனை படிக்க வைத்து வந்தார். இந்நிலையில் இவரது ஊரில் புதுவாழ்வு திட்டம் துவக்கப்பட்டது. இவரின் வறுமை நிலையினைக் கண்டு கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மூலம் தனி நபர் கடனாக ரூ. 8000/– வழங்கப்பட்டது. இந்தப் பணத்தைக் கொண்டு சலவைப் பெட்டி வாங்கி, துணிகளை சலவை செய்து கொடுப்பதன் மூலம் தினந்தோறும் போதுமான அளவு வருவாய் பெற்று வருகிறார்.



சாதிக்க வைத்த புதுவாழ்வு

புதுக்கோட்டை மாவட்டம், ஆண்டிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் ரம்யா. எ.மாத்தூர் அரசு பள்ளியில் 11ஆம் வகுப்பு படித்து வரும் இவர் பிறவியிலேயே கை ஊனமான மாற்றுத் திறனாளி ஆவார். சாதனை படைக்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்ட இவர், பல்வேறு தடகளப் போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கங்களைப் பெற்றுள்ளார். சமீபத்தில் மதுரையில் நடைபெற்ற மாநில அளவிலான மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு மாநில அளவில் முதலிடம் பெற்றார். இவரைப் பாராட்டி புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் ரூ. 5,000/– பரிசு வழங்கினார்.

வளமான எதிர்காலம்

கரூர் மாவட்டம், ஒத்தப்பட்டி, மேலப்பகுதி ஊராட்சியை சேர்ந்த கிருஷ்ணன், இரண்டு கைகளும் செயலிழந்த மாற்றுத் திறனாளி. இவருக்கு யாரும் எந்த வேலையும் கொடுக்க முன்வராததால், தந்தையின் பராமரிப்பில் வாழ்ந்து வந்தார். மாற்றுத் திறனாளி பட்டியலில் இருந்ததால், துர்க்கை அம்மன் சிறப்புக் குழுவில் உறுப்பினரான கிருஷ்ணனுக்கு உள்கடனாக ரூ. 3,000/–மும், தனிநபர் கடனாக ரூ. 10,000/–மும் வழங்கப்பட்டது. இந்தத் தொகையை மூலதனமாகக் கொண்டு 4 ஆடுகள் வாங்கி வளர்க்கத் தொடங்கிய கிருஷ்ணனுக்கு தற்போது 7 ஆடுகளுக்கு உள்ளன. வறுமையின் பிடியில் இருந்து தற்போது விடுபட்டுள்ள கிருஷ்ணன், தனக்கு வீடு தேடி வந்து கடனுதவி செய்த புதுவாழ்வு திட்டத்திற்கு தனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறார்.

புதுவாழ்வு தந்த வளம்

கரூர் மாவட்டம், தாந்தோணி ஒன்றியம், வெள்ளியனை களப்பகுதி பாகநத்தம் ஊராட்சி செல்வம் நகர் காலனி பகுதியை சேர்ந்தவர் மாரியம்மாள். இவருக்கு 1 மகளும், 2 மகன்களும் உள்ளனர். உடல்நிலை சரியில்லாத நிலையில் எவ்வித வேலையும் செய்ய முடியாததால் தனது மகள்களின் பராமரிப்பில் உள்ளார். கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தில் உறுப்பினராக இவரை சேர்த்து, இவருக்கு தனிநபர் கடனாக ரூ. 6,000/– வறுமை ஒழிப்பு சங்கம் மூலம் வழங்கப்பட்டது. அந்தத் தொகையில் 2 ஆடுகள் வாங்கி வளர்த்து வருவதன் மூலம் வருவாய் பெற்று வருகிறார் மாரியம்மாள். வயதான தனக்கு வாழ வழிகாட்டிய புதுவாழ்வு திட்டத்திற்கும், கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கும் தான் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளதாக மாரியம்மாள் கூறுகிறார்.

க.பரமத்தி ஊராட்சியில் 8ஆம் வகுப்பு வரை படித்துள்ள பெண்களுக்கு புதுவாழ்வு திட்டத்தின் மூலம் அழகுக்கலை பயிற்சி இலவசமாக வழங்கப்படுவதை அறிந்து, கலைச்செல்வி விண்ணப்பித்தார். இவரின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, இவருக்கு அழகுகலைப் பயிற்சி வழங்கப்பட்டது.

வளமானது வாழ்வு

கரூர் மாவட்டம், க.பரமத்தி ஊராட்சி பெரியார் நகரில் வசித்து வரும் கலைச்செல்வி 8ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். இவரின் எனது கணவர் கூலி வேலை செய்கிறார். இவர்களுக்கு இரண்டு பெண் குழந்தைகளும், 1 ஆண் குழந்தையும் இருக்கிறார்கள். கூலி வேலைக்கு செல்வதின் மூலம் கிடைக்கும் குறைந்த அளவு வருவாயில் மிகவும் சிரமத்துடன் வாழ்க்கையை நடத்தி வந்தனர்.

க.பரமத்தி ஊராட்சியில் 8ஆம் வகுப்பு வரை படித்துள்ள பெண்களுக்கு புதுவாழ்வு திட்டத்தின் மூலம் அழகுக்கலை பயிற்சி இலவசமாக வழங்கப்படுவதை அறிந்து, கலைச்செல்வி விண்ணப்பித்தார். இவரது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, 'பெலுசியா அழகுக்கலை பயிற்சி நிறுவனத்தில்' 45 நாட்கள் பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சிக்குப் பின்னர் கலைச்செல்வி க.பரமத்தி ஊராட்சியில் 'ஹனித்ரா அழகு நிலையத்தை' நடத்தி வருகிறார். அழகு நிலையம் மூலம் மாதம் ரூ. 6000/– வரை வருவாய் பெறுவதால் இவரின் வறுமையும் நீங்கியுள்ளது. குழந்தைகளுக்கு நல்ல கல்வியும் அளித்து வருகிறார்.

இவர்களின் சாதனை படிக்கற்களை தெரிந்து கொள்வோம் வாருங்கள்.

காஞ்சிபுரம் மாவட்டம்

பல்லவர்மேடு நகர்ப்புற கூட்டமைப்பின் செயல்பாடுகள்

'பூவோடு சேர்ந்த நாரும் மணக்கும்' என்பது முதுமொழி. நல்ல பூவோடு சேர்ந்த வாழை நார் மணம் பெறுவதைப் போல நல்ல குழுவோடு சேர்ந்த உறுப்பினர்களும் கூட்டமைப்பு மூலம் பயன் பெறுவார்கள் என்பதற்கு ஊதாரணமாக செயல்பட்டு வருகிறது நம் காஞ்சிபுரம் நகராட்சியில் மகளிர் திட்டத்தின் மூலம் திறன்பட செயலாற்றி வரும் பல்லவர்மேடு நகர்ப்புற அளவிலான கூட்டமைப்பு.

காஞ்சிபுரம் நகராட்சி 19வது வார்டு, பல்லவர் மேடு பகுதியில் செயல்படும் பல்லவர் மேடு நகர்ப்புற அளவிலான மகளிர் குழு கூட்டமைப்பில் 38 சுய உதவிக் குழுக்கள் 516 உறுப்பினர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. முறையாக செயல்பட்டு வந்ததால், இக்கூட்டமைப்பிற்கு மாவட்ட ஆட்சியரிடமிருந்து ரூ. 1 இலட்சம் ஊக்க நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த பல்லவர் மேடு கூட்டமைப்பில் உள்ள ஒவ்வொரு குழுவும் தலா ரூ. 10 ஆயிரம் பங்குத்தொகை செலுத்தி, அத்தொகையினைக் கொண்டு பிளாஸ்டிக் நாற்காலிகளை வாங்கி அவைகளை வாடகைக்கு விடும் தொழிலை செய்து வருகின்றனர். இதில் கிடைக்கும் வருமானத்தின் மூலம் தங்கள் கூட்டமைப்பில் தொழில் குழுக்களை உருவாக்கி கடன் உதவியும் வழங்கி வருகின்றனர்.

சாதனையின் அடுத்த படிக்கல்லாக தங்கள் பகுதியில் பாக்கு மட்டைத் தட்டுகள் தயாரிப்பு விற்பனையகத்தை கூட்டமைப்பு மகளிர் உருவாக்கியுள்ளனர். தாங்கள் தயாரிக்கும் தட்டுகளை உள்ளூரிலேயே கோவில்களுக்கும், கடைகளுக்கும் விற்பனை செய்து வருகிறார்கள். மேலும், கைவினைப் பொருட்கள், அம்மன் பாவாடைகள், ஜெல் கேண்டில்கள், அலங்காரப் பொருட்கள், பட்டு மாலைகள், அழகிய பூங்கொத்துக்கள், செயற்கை மணி மாலைகள் போன்றவற்றை தயாரித்து வருகின்றனர்.

இக்கூட்டமைப்பு தங்கள் பகுதியில் உள்ள சுகாதார வளாகத்தை சுழற்சி முறையில் சுகாதார பராமரிப்பு குழு என்ற பெயரில் 15 உறுப்பினர்களைக் கொண்டு சுத்தமாக பராமரித்து வருகின்றனர். முக்கியமாக சுகாதார வளாகத்திற்கு மொத்த பராமரிப்பு சீரமைப்பு செலவுகளையும் கூட்டமைப்பின் மூலம் பராமரிப்புக் குழுவே செய்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். இதன் மூலம் தங்கள் பகுதி பெண்களின் சுகாதாரத் திற்கு இந்த கூட்டமைப்பானது அரும்பணி ஆற்றி வருவது தெள்ளத் தெளிவாகிறது.

இந்த கூட்டமைப்பில் உறுப்பினராக இடம் பெறுவதற்கு நமக்கு கிடைத்த வாய்ப்பு. நம்மால் முடிந்த வரை நல்ல செயல்களை கூட்டமைப்பின் வெற்றிக்காக செய்ய வேண்டும். நம் கூட்டமைப்பு வெற்றி என்பது நமது வெற்றி என்ற உணர்வோடு கூட்டமைப்பு மகளிர் செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். தடைக்கற்களை படிக்கற்களாக கொண்டு முன்னேறும் இக்கூட்டமைப்பு சிறக்க அனைவரும் வாழ்த்துங்கள். ■

காஞ்சிபுரம் தேசிய குழந்தை தொழிலாளர் திட்டத்தின் மூலமாக, பல்லவர் மேடு பகுதி சுற்று வட்டாரங்களில் படிக்க வசதியில்லலாத ஆதி திராவிடர், பழங்குடி மற்றும் இதர பிரிவு பள்ளிச் செல்லாத குழந்தைகளை தங்கள் பகுதி சமுதாயக் கூடத்தில் இடம் கொடுத்து, குழந்தைகள் படிக்க ஏற்பாடு செய்துள்ளது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

சுற்றுச்சூழலைக் காக்கும் சூரியசக்தி

நமது எதிர்காலம் நம் கையில்

சோலார் நீர் பம்புகள் ஒரு மலிவான தீர்வை வயல்களின் பாசனத்துக்கு வழங்குகிறது. சோலார் மின் நிலையத்தை அமைப்பதற்கான ஆரம்ப முதலீடு அதிகம் என்றாலும், அது சூரிய ஒளியைத் தவிர வேறு எந்த எரிபொருளையும் சார்ந்திருக்கவில்லை என்பதால் அது எரிபொருள் மீதான செலவைக் குறைக்கிறது.

நீர் ஏற்றத்துக்கான சூரியவொளி சக்தி

அதிகரித்து வரும் டீசல் விலை மற்றும் தடையில்லா மின்சாரத்தின் கிடைக்குந்தன்மை ஊரகப் பகுதிகளில் ஒரு பிரச்சனையாகி வருவதால், சோலார் நீர் பம்புகள் ஒரு மலிவான தீர்வை வயல்களின் பாசனத்துக்கு வழங்குகிறது. ஒரு சோலார் நீர் ஏற்றும் அமைப்பு என்பது பொதுவாக ஒரு மோட்டார் பம்புசெட்டை இயக்குவதற்கான சோலார் செல் தொகுதி கலன் மின்சார சோலார் பம்பு ஒர்க்ஸ் என்று அழைக்கப்படுகின்றன. சோலார் பம்புகள் திறந்த கிணறுகள், ஓடைகள், குளங்கள் மற்றும் கால் வாய்கள் போன்ற மேலோட்டமான ஆழத்திலிருந்து நீரை ஏற்றுவதற்கு பயன்படுத்தலாம். சோலார் மின் நிலையத்தை அமைப்பதற்கான ஆரம்ப முதலீடு அதிகம் என்றாலும், அது சூரிய ஒளியைத் தவிர வேறு எந்த எரிபொருளையும் சார்ந்திருக்கவில்லை என்பதால் அதன் பலன்கள் விவசாயிகளுக்கு ஆழ்ந்தவையாக இருக்கும் என்பனவற்றால் அது எரிபொருள் மீதான செலவைக் குறைக்கிறது.

சோலார் பம்புகளின் வகைகள்

DC மேற்பரப்பு (சென்ட்ரிஃப்யூகல்) அல்லது மிதக்கும் பம்ப் செட்

சென்ட்ரிஃப்யூகள் பம்புகள் திறந்த கிணறுகள், ஓடைகள், குளங்கள், கால் வாய்கள் முதலான மேலோட்டமான ஆழத்தில் தண்ணீர் கிடைக்கும் பகுதிகளுக்கு பரிந்துரைக்கப்படுகின்றன. அவை DC மோட்டார் மூலம் இயங்குகின்றன.

AC மேற்பரப்பு அல்லது சப்மெர்டிஸிபிள் பம்ப் செட்

சப்மெர்டிஸிபிள் பம்புகள் நீர் படுக்கை உயர் ஆழத்துக்கு (14 மீட்டருக்கும் மேல்) கிடைக்கக் கூடிய இடங்களுக்குப் பரிந்துரைக்கப்படுகின்றன. அதனால் 50 மீட்டர் ஆழம் வரை நீரை ஏற்ற முடியும்.

> சோலார் பம்புகள் திறந்த கிணறுகள், ஓடைகள், குளங்கள் மற்றும் கால்வாய்கள் போன்ற மேலோட்டமான ஆழத்திலிருந்து நீரை ஏற்றுவதற்கு பயன்படுத்தலாம். சோலார் மின் நிலையத்தை அமைப்பதற்கான ஆரம்ப முதலீடு அதிகம் என்றாலும், அது சூரிய ஒளியைத் தவிர வேறு எந்த எரிபொருளையும் சார்ந்திருக்கவில்லை.

செலவு மற்றும் மானியம்

சோலார் வாட்டர் பம்புகளுக்கான செலவு தோராயமாக ரூ. 2.10 லட்சம் முதல் ரூ. 5.10 லட்சம் வரை வகை மற்றும் பம்புகளின் திறனைப் பொருத்து இருக்கும். புதிய மற்றும் புதுப்பிக்கக்கூடிய சக்தி அமைச்சுகத்தின் (MNRE) மானியம் பிரதி வாட்டுக்கு ரூ. 81/– என்கிற அளவில் அதிகபட்சமாக ரூ. 50,000/–க்கு உட்பட்டு பிரதி அமைப்புக்கு குடிநீர் போன்ற சமுதாயப் பயன்பாடுகளுக்காக தனிநபருக்கு முன்னுரிமை என்ற அளவில் தரப்படுகிறது. இந்திய புதுப்பிக்கத்தக்க சக்தி மேம்பாட்டு முகமை (IREDA) ஆண்டுக்கு 5% என்கிற விகிதத்தில் முறையே மீதமுள்ள விலையில் அதிகபட்சமாக 90%–ஐ 10 ஆண்டுகளில் திருப்ப செலுத்தத்தக்க வகையில் தகுதி வாய்ந்த நபர்களுக்கு கடனாக வழங்குகிறது.

எங்கே வாங்குவது?

மானியத்துடன் சோலார் நீர் பம்புகளை அமைப்பதற்கு தமிழ்நாடு சக்தி மேம்பாட்டு முகமையை (TEDA) அணுகலாம்.

தமிழ்நாடு சக்தி மேம்பாட்டு முகமை (TEDA) தொடர்பு கொள்ளவும்
தமிழ்நாடு சக்தி மேம்பாட்டு முகமை,
ஈ.வி.கே. சம்பத் மாளிகை, 5வது தளம், எண். 68,
கல்லூரி சாலை, சென்னை – 600 006.
தொலைபேசி எண் : 044 – 2822 2973 ■

நமது மின்சாரப் பிரச்சனை மற்றும் அதிக விலையுள்ள மின்சாரத்திற்கான பிரச்சனையை கடப்பதற்கான ஒரு ஆக்கப்பூர்வமான வழி சூரியவொளி சக்தியாகும். ஆரம்பகால முதலீடு இந்த கட்டமைப்புகளுக்கு அதிக மாக இருக்கலாம். என்றாலும் நீண்ட காலத்திற்கு எரிபொருளுக்கான செலவை அரசு மானியங்களுடன் சேர்த்து ஈடு செய்யும். இவ்வாறு சூரியசக்தி மலிவான, சுத்தமான, சுற்றுப்புறச் சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத மற்றும் நம்பகமான சக்தி ஆதாரங்களுக்கான ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்றை சாதாரண மனிதனுக்கு வழங்குகிறது.

உடல் நலத்தைக் காக்கும் மூலிகைகள்

மூலிகைகள் நம் உடல் நலத்தைக் காப்பதுடன், ஆரோக்கிய வாழ்விற்கும் வழிவகுக்கிறது. நோய் எதிர்ப்பு சக்தியும், மருத்துவ குணமும் நிறைந்த மூலிகைகள் காடுகள், மலைகள் போன்ற இடங்களில் இயற்கையாகவே வளர்ந்து உள்ளன. இந்த மூலிகைகளின் மருத்துவ குணங்களையும், அவைகளை பயன்படுத்துவதால் குணமாகும் நோய்களையும் பற்றி நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் மூலிகைகளைப் பயிரிட்டு வரும் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் விளக்க மாக இப்பகுதியில் கூறுகின்றனர்.

மனிதர்களின் உடல் நலத்தைக் காத்து ஆரோக்கியமான வாழ்விற்கு வழிகாட்டும் மேற்கண்டு மூலிகைகள் செடிகள் அனைத்தும், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கொல்லிமலையில் ஒவ்வொரு வருடமும் ஆடி முதல் மார்கழி மாதம் வரை கிடைக்கும்.

தூதுவளை

தூதுவளை சூரணத்தை வெந்நீரில் கலந்து தினமும் 2 வேளை உட்கொண்டால் சளி மற்றும் இருமல் குணமாகும்.

சிரியாநங்கை

காய்ச்சல் சரியாக சிரியா நங்கை சூரணத்தை தினமும் 2 வேளை காய்ச்சல் சரியாகும் வரை உட்கொள்ளவும்.

பெரியா நங்கை

அரிப்பு, தோல் வெடிப்பு, தோல் நோய்கள் மற்றும் வெண் குஷ்டம் ஆகிய நோய்கள் குணமடைய பெரியா நங்கை சூரணத்தை தினம் 2 வேளை நோய் குணமாகும் வரை உட்கொள்ள வேண்டும். (பத்தியம் – கத்தரிக்காய் மற்றும் அசைவம் சாப்பிடக் கூடாது.)

சித்தரத்தை, சுக்கு, மிளகு, திப்பிலி

சித்தரத்தை, சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றை வறுத்து இடித்து சூரணமாக தேன் மற்றும் வெந்நீர் கலந்து சாப்பிட்டால் ஆஸ்த்துமா நோய் கட்டுப்படும்.

கீழாநெல்லி

காமாலை நோய் உள்ளவர்கள் கீழாநெல்லி மூலிகையுடன் மஞ்ச கரிசலாங்கண்ணி சேர்த்து அரைத்து காலையும் மாலையும் 2 வேளை சாப்பிட வேண்டும். சாப்பிடும் போது இளநீர் பருக வேண்டும். 3 நாட்கள் உப்பு இல்லாத பத்தி யம் இருக்க வேண்டும். மஞ்சள் காமாலை சரியாகும் வரை கஞ்சி மட்டும் குடிக்க வேண்டும். இந்த மூலிகையை அரைத்து தூளாக்கி பாலில் கலந்து சாப்பிட்டு வந்தால் நெஞ்சு எரிச்சல் குணமாகும்.

முடக்கத்தான்

முடக்கத்தான் மூலிகையை இடித்து சாறு எடுத்து, நல்லெண்ணையுடன் கலந்து காய்ச்சி, தினமும் 2 வேளை முழங்காலில் தேய்த்து வந்தால் மூட்டு வலி குணமாகும்.

மலைப்பூண்டு

வேப்ப எண்ணெயுடன் மலைப் பூண்டை சேர்த்து கொதிக்க வைத்து ஆற வைத்து தலைக்கு தேய்த்து 3 மணி நேரம் சூரிய ஒளியில் இருக்க வேண்டும். இவ்வாறு நான்கு நாட்கள் செய்து வந்தால் வலிப்பு நோய் கட்டுப்படும்.

இன்குரல்

இன்குரல் என்ற மூலிகையை இடித்து, சூரணம் செய்து தேனில் கலந்து சாப்பிட்டு வந்தால் காசநோய் கட்டுப்படும். காசநோய் கட்டுப்படும் வரை சாப்பிட்டு வர வேண்டும்.

கனக எருமை

கனக எருமை மூலிகை சூரணத்தை உட்கொண்டு வந்தால் புற்றுநோய் கட்டுப்படும்.

முருகவல்லி

முருகவல்லி மூலிகையை குளிக்கும் நீரில் கொதிக்க வைத்து, பிறகு ஆற வைத்து, தலைக்கு குளித்தால் வாத நோய் சரியாகும்.

வல்லாரை

வல்லாரைக் கீரையை அரைத்து, பவுடராக்கி பாலுடன் கலந்து தினமும் சாப்பிட்டு வந்தால் ஞாபக சக்தி நன்றாக இருக்கும்.

மணத்தக்காளி

மணத்தக்காளிக் கீரையை பொரியலாகவோ அல்லது துவையலாகவோ சாப்பிட்டு வந்தால் வயிற்றுப்புண் மற்றும் வாய்ப்புண் குணமாகும். ■

Published by S.CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From TNCDW, Annai Teresa Mahalir Valagam, 1st Floor, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai – 600 034 (78,000 Copies circulated) an Printed by C. JEBAMANI, CANAAN PRESS PRIVATE LTD., No. 62/1, Peter's Road, Royapettah, Chennai - 600 014. Editor: S.CHINNAPPAN.

திறந்தவெளியில் மலம் கழிப்பதால், மற்றவர்களின் கேலி கிண்டலுக்கு ஆளாவது மட்டுமல்ல. கேடு விளைவிக்கும் நோய்கள் நம்மையும், மற்றவர்களையும் தாக்கும் அபாயமும் ஏற்படுகிறது. கழிவறையில் மலம் கழிப்பதால், இவை அனைத்தையும் தடுக்க முடியும். எனவே, இனி மலம் கழிக்க கழிவறையை பயன்படுத்துங்கள். திறந்தவெளியில் மலம் கழிப்பவர்களைப் பார்த்தால், சீச்சீ என சொல்லுங்கள்.

கழிவறை உபயோகமே, வாழ்க்கைக்கு ஆரோக்கியம்.

unicef
unite for children

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 498 / 2012
Reg. No. TN/CH(C)/455/12-14 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP - 564 / 2012 - 14
Date of Publication 22.04.2014